★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளஸ்வ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

மங்கள வைபவங்களுக்
கேற்ப உடுபுடவைகள்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஆ வைகாசி மீ 11 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 29 (25 05 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 95

# புலிகள் தமது ஆயுதங்களை கீழேவைத்தால்தான் தேர்தல்

## அமைச்சர் ரஞ்சன் அறிவிப்பு

கொழும்பு, மே, 25

விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைத்தால்தான் வடக்கு, கிழக்கில் தேர்தல்களை நடத்தமுடியும்.

சுதந்திரமான தேர்தல்களை பலகட்சி அடிப்படையில்தான் நடத்தமுடியும்,

— இவ்வாறு தெரிவித்தார் பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு, ரஞ்சன் விஜேரத்ன.

அமைச்சரவைக் கூட்ட முடிவுகள் பற்றிய தகவல்களை வெளியிடுவதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட பத்திரிகையாளர்கள் மாநாட்டிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அங்கு செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுடன் என்ன செய்யவேண்டும்! என்ன பேசவேண்டும்; எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது எமக்குத் தெரியும்.

மீண்டும் உள்நாட்டில் யுத்தம் ஒன்றைஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்

நாட்டில் கடந்த 40, 50 வருடங்களாக மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. ஆனால் விடுதலைப் புலிகள் மரங்களை வெட்டுகிறார்கள் என்றால் எதிர்க்கட்சியினர் கூச்சல் இடுகிறார்கள்; இது சின்ன விடயம்.

ஆனால் யாரையும் மரம் வெட்ட நாம் அனுமதிக்க மாட்டோம்,

தேர்தலில் போட்டியிட வேண்டுமானால் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்றும் விடுதலைப் புலிகளுக்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## குடியேற்றம் குறித்து அரசே முடிவு செய்யுமாம்

கொழும்பு, மே 25

யாரை எங்கே குடியேற்றுவது என்பதை அரசாங்கமே முடிவு செய்யும். வேறு எவரும் அதனை முடிவு செய்ய முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா.

இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு லட்சம் மலையகத் தமிழர்களை வடக்கு-கிழக்கில் குடியமர்த்தத் தாம் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்தது குறித்து, செய்தியாளர்கள் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். (அ)

## யாழ்.மாநகருக்கு மேலும் ரூ. 25 லட்சம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ். மாநகர சபைக்கு மேலும் 25 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். நகரின் புனரமைப்பு வேலைகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (இ-9)



அமெரிக்கா, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு வைத்தியம், பொறியியல் மற்றும் பல துறைகளில் பயன்படுத்தக் கூடிய பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

அவற்றைக் கையளிக்கும் வைபவம் கடந்த புதன்கிழமை காலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தகவல் சேவை நிலையத்தின் பொறுப்பதிகாரி திரு. கிளத்தன் றொஸ் நூல்களை உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவிடம் கையளித்தார். (அ)

## ஊழியர் சேமலாப நிதியை ஓய்வூதியமாக மாற்றும் முயற்சியை அரசு கைவிட்டது

ஊழியர் சேமலாப நிதியை ஓய்வூதியத் திட்டமாக மாற்ற எடுத்து வந்த முயற்சிகளை அரசாங்கம் கைவிட்டது.

இத்திட்டத்திற்கு தொழிற் சங்கங்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. ஊழியர் சேமலாப நிதியை ஓய்வூதியத் திட்டமாக மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் நகல் சட்டம் ஒன்றை கொண்டு வர தொழில் அமைச்சு எடுத்து வந்த முயற்சியும் கைவிடப்பட்டது. (இ-எ)

## ஜூன் நடுப்பகுதியில் இருந்தே பாடசாலையில் உணவுமுத்திரை நிலுவையுடன் சேர்த்துவழங்கப்படும்

பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரை ஜூன் மாதம் 15 ஆம் திகதி அளவிலேயே வழங்கப்படும் என்று தெரிகிறது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கடந்த 21 ஆம் திகதி முதல் மதிய உணவு வழங்குவது நிறுத்தப்பட்டது.

ஆனால் உணவு முத்திரைகள் இன்னும் அச்சிடப்படாத தால் அவற்றை விநியோகிக்க முடியவில்லை.

எனினும் அடுத்த மாத நடுப்பகுதியில் நிலுவையுடன் உணவு முத்திரை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## திருமலையில் செவ்வாயன்று கான்ஸ்டபிள் குத்திக்கொலை

திருகோணமலைப் பகுதியில் செவ்வாயன்றுஇரவு பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டார்.

நாலாம் கட்டை பொலிஸ் போஸ்ட்டைச் சேர்ந்த சுனில் சாந்த (வயது 29) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

வாய்த்தர்க்கம் ஒன்றை அடுத்தே இச்கொலை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கத்தியுடன் கைது செய்யப்பட்ட சாந்த எனும் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலைப் பதில் நீதவான் மு. சோ. செல்வராசா உத்தரவிட்டுள்ளார்.

சடலம் சொந்த ஊரான மத்துகமவுக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. (உ-155)

## மாகாணசபை கலைக்கப்படுமா? இரு வாரங்களில் முடிவு தெரியும்!

கொழும்பு, மே. 25

வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது குறித்து அரசாங்கம் இன்னும் இரண்டொரு வாரங்களில் முடிவு செய்யும்.

இத்தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று செய்தியாளர் மத்தியில் வெளியிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் நிலை குறித்து ஆளுநர் அனுப்பி வைத்திருக்கும் அறிக்கை அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கிறது. அதனை ஆராய்ந்து வருகின்றோம்.

மாகாணசபையை கலைப்பது பற்றி 2 வாரங்களுக்குள் முடிவு செய்யப்படும், —என்றும் அவர் சொன்னார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபை கடந்த மார்ச் முதலாம் திகதி கூடியது அதற்குப் பின்னர் சபை கூடவில்லை.

தொடர்ந்து மூன்று மாதங்கள் சபை கூடாவிட்டால் சட்டரீதியாக சபையை ஜனாதிபதி கலைக்க முடியும்.

இன்னும் ஒருவாரகாலத்தினுள் சபை கூடாவிட்டால் அதனைக் காரணம் காட்டி ஜனாதிபதி மாகாணசபையைக் கலைத்து புதிய தேர்தல்களுக்கு உத்தரவிட முடியும் என்பது குறிப்பிடத் தக்கது. [இ-2]

## ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்க அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படும்

கொழும்பு, மே 25

ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவது தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படும்

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

ஆறாது திருத்தத்தை நீக்குவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருகிறது.

இது தொடர்பான சட்ட ஆலோசனையும் பெறப்பட்டிருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழ்க் குழுக்களும் தெரிவித்திருக்கும் கருத்துகளை அரசு கவனத்தில் எடுத்திருக்கிறது.

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு நடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை என்பதையும் கவனத்தில் கொண்டே நாம் செயற்பட வேண்டியிருக்கிறது.

-இவ்வாறு அவர் மேலும் சொன்னார். (உ-2)

## அரிசி, சீனி விலைகள் நேற்று முதல் குறைப்பு

கொழும்பு, மே 25

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்டஅரிசியின் விலை கிலோவுக்கு ஒரு ரூபா ஐம்பது சதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலை குறைப்பு உடனடியாக அமுலுக்கு வருகிறது என்று நேற்று அரசாங்கம் அறிவித்தது

சீனியின் இறக்குமதி சுங்கத் தீர்வையும் ஒரு கிலோவிற்கு ஒரு ரூபாவால் குறைக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக சீனியின் சில்லறை விலையும் ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாவால் குறையும் என்று நிதி அமைச்சு அறிவித்தது. (அ-எ)

## தென் இந்திய சஞ்சிகைகள் சிலவற்றின் விற்பனை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 25

தென் இந்திய சஞ்சிகைகள் சிலவற்றை விற்பனை செய்வதையாழ்.நகர புத்தக கடைகள் நிறுத்தி உள்ளன.

வாரப்பத்திரிகையான குமுதம், அரசியல் ஏடான துக்ளக், மற்றும் சினிமா சம்பந்தமான பொம்மை, ஜெமினி சினிமா, வண்ணத்திரை, பேசும்படம், சினிமா எக்ஸ்பிரஸ் ஆகியவையே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சஞ்சிகைகள் ஆகும்.

இந்த சஞ்சிகைகளால் தமிழர் கலை, கலாசாரம் சீரழிவதாகவும் இவற்றின் விற்பனையை நிறுத்துவது மூலம் உள்ளூர் வெளியீடுகளுக்குஊக்கம் அளிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-9]

## முச்சந்தி முரளி




மக்கள் சொல்லுகிற குறையளை எல்லாம் இனிமேல் அரசுக்குப் பதிலாய் ஊழியர் சுமக்கட்டும் எண்டு நல்ல மனம் வைச்சுச் செய்யினம் போலை......!

## சுப நேரம்

25-5-90

வெள்ளிக்கிழமை வைகாசி 11

சுபநேரம் ;
05.52 -07. 22

இராகுகாலம்
10·22 - 11.52

## அரச ஊழியர்கள் சுங்கத் திணைக்களத்தில் நியமனம் பெற வாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 25

அரச ஊழியர்களை சுங்கப் பகுதி ஊழியர்களாக சேர்த்துக் கொள்வது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

நியமனங்கள் போட்டிப் பரீட்சையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும்.

அரச ஊழியர்களில் ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி அடைந்தோர், ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தோர் அல்லது பல்கலைக்கழக பட்டதாரிகள் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் 1-5-90 இல் 40 வயதுக்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சுங்கத் திணைக்கள தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (இ-9)

## கைதான இந்தியர் நால்வரும் பொலீஸாரிடம் ஒப்படைப்பு

### கடத்தல்பொருள்கள்,படகுபறிமுதல்

யாழ்ப்பாணம்,மே 25

காங்கேசனில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தியர்கள் நால்வரும் நேற்று முன்தினம் இலங்கை பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்

பேதுரு அலெக்ஸாண்டர் (வயது 21) தங்கச்சிமடம், ஜேசுமிக்கேல்மானல் (வயது 14) ராமேஸ்வரம், நீக்கிலஸ் இந்துராஜா (வயது 25) ராமேஸ்வரம்,பேதுருஜோர்ஜ் (வயது 23) தங்கச்சி மடம் ஆகியோரே இந்த நால்வரும் ஆவார்.

இவர்களும் இலங்கையர் ஒருவரும் பேசாலை பகுதிகளிலிருந்து 5 மைல் தொலைவில் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களின் இழுவைப்படகில் 32 பொதிகளில் கடத்தல் பொருள்கள் இருந்தன என்று கூறப்படுகின்றது.

இவர்கள் கடந்த 15 ஆம் திகதி காங்கேசன் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சுங்கத் திணைக்களத்தினால் விசாரணை செய்யப்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை போக்குவரத்துச் சபை நடவடிக்கைகள் மக்கள் மயமாகும்

### ஜூன் முதல் படிப்படியாக அமுல்நடத்த முடிவு

கொழும்பு, மே 25

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நடவடிக்கைகள் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து படிப்படியாக மக்கள் மயப்படுத்தல் இடம்பெறும்.

மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டம் பூரணமாக நிறைவேற்றப்பட்டு விடும்.

போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் விஜேபால மென்டிஸ் நேற்று இத்தகவல்களை செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

வாராந்திர அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர்மாநாட்டில் அரசு பஸ் சேவைகள் அனைத்தையும் மக்கள் மயப்படுத்துவது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்.

தேசியமயக்கொள்கைதோல்வி அடைந்துவிட்டது. அதனால் தான் மக்கள் மயப்படுத்தும் கொள்கையை அரசு கொண்டு வந்துள்ளது என்றும் அமைச்சர் சொன்னார்.

அதன் பின்னர் பஸ் சேவைகளை மக்கள் மயப்படுத்தும் திட்டம் பற்றிய விவரங்களை அமைச்சர் விஜேபால மென்டிஸ் வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது:

50 சதவீதமானபங்கு போக்குவரத்து சபை ஊழியருக்கு வழங்கப்படும்.

பங்குகளை பெற விரும்பாத ஊழியர் ஓய்வு பெற

[7-ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் கைதான வட, கிழக்கு இளைஞர்களை பிணையில் விட மறுப்பு

கொழும்பு மே 25

கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்த போது கைதான வடக்கு - கிழக்கு பகுதியைச் சேர்ந்த எட்டு இளைஞர்களை பிணையில் விடுவிக்க கொழும்பு மேலதிக நீதிவான் திரு. டி. எம். சிறிவர்த்தனா மறுத்து விட்டார்.

இந்த இளைஞர்கள் பிணை விடுவிக்கப்படுவதற்கு பொலீஸார் எதிர்ப்புத் தெரிவித்தவர். அதனைத் தொடர்ந்தே பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

சந்தேகநபர்களான செல்வராஜா, சின்னத்தம்பி, ஆதம்பாவா, அப்துல் நஜீப், முகமது நிஸ்ஹார், க. திவ்வியநாதன், பொ. தனபாலன், முகமது அஷ்ரப் கலி, ஜெ ஸ்ரீ ரஞ்சன் ஆகியோர் பொரளையில் டி. எஸ். சேனந

(7 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள EN தொடரிலக்கமுள்ள மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கனி கூட்ஸ் வேக்ஸ், 190 ஆம் கட்டை நுணாவில் சாவகச்சேரி. (3705)

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த [Crimson Globe] பீட்றூட் விதை, விவசாய ஆய்வுகூட அனுமதி பெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது விற்பனைக்கு உண்டு பிள்ளையார், 259' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3490)

### வாப் ஓடுபவர் தேவை

மின்தறி நெசவாலைக்கு வாப்ஓடுபவர் தேவை. 28/5/90 காலை 9 மணிக்கு நேரில் சமூகம் கொடுக்கவும். ஸ்ரீராஜ் இன்டஸ்றீஸ் வட்டு கிழக்கு, சித்தன்கேணி. (3701)

### தவறிவிட்டது

கனடாவில் இருந்துசின்னத்தம்பி ஆறுமுகம் என்பவரால் அனுப்பப்பட்ட 100 டொலர் காசோலை வாடியடியில் தவறி விட்டது தயவு செய்து கண்டெடுத்தவர்கள்சி செல்வராஜா, கறுக்காய்தீவு, பூநகரி என்ற முகவரிக்கு அறியத்தரவும். (வங்கியில் யாராவது மாற்றி இருந்தால் அறியத்தரவும். (3702)

### வாங்கவும் விற்கவும்

ஏராளமான பழைய கதைப் புத்தகங்கள் வாங்கப்படும். விற்கப்படும் ஆனந்தவிகடன் குமுதம், கலைமகள், கல்கி, சேனாதிராசா, Second Hand Book House 13/6 ஸ்ரான்லி றோட், (இலங்கை வங்கிக்கு முன்) யாழ்ப்பாணம். (3709)

### விற்பனைக்கு

ரெலிவங்கன் T. V. 26 அங்.கலர், விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 15,000. ரேடியோ மனுவல், 131, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3497)

### Restaurant

யாழ் சைனீஸ் றெஸ்ற்ரோறன்ற், முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், அறைகளும் வாடகைக்கு உண்டு. [3430]

### தேவை

சிறு வீடு அல்வது அனெக்ஸ் வாடகைக்கு தேவை. சகல வசதிகளுடன் விரும்பத்தக்கது நல்ல வாடகையும் முற்பணமும் கொடுக்கப்படும். முழு விபரங்களையும் தெரிவிக்கவும் இல-131 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (13269)

### தவறிவிட்டது

க. பாலமுகுந்தன் ஆகிய எனது அடையாள அட்டை இல. [6 9 0 1 1 3189] றைவிங் லைசென்ஸ் இன்சூரன்ஸ் இல 3F-152 92, டயறி ஆகியன கடந்த செல்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள்உதயன்காரியாலயத்தில் தயவு செய்துஒப்படைக்கவும். [3704]

## சுகாதார பரிசோதகர்

புதுக்குடியிருப்பு, மே 25

ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சுகாதாரப் பரிசோதகர் எவரும் நியமிக்கப்படவில்லை. (இ-126)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
05-12-1917

உதிர்வு:
25-05-1987

திதி:
20-06-1990



### திருமதி பாக்கியம் கந்தையா

மூன்றாண்டு சென்றுமே
மூண்டெரிக்கும் நின்நினைவு
முப்பொழுதும் தகிக்குமோ
எப்பொழுது தணியுமோ

உங்கள் நினைவில் வாடும்!
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தொல்புரம். (13270)

---

பாடசாலைகள், கழகங்களுக்கிடையே

# 40 ஓவர் கிரிக்கெட் போட்டி

# மாகாண அமைச்சு நடத்தும்

யாழ்ப்பாணம் மே 25

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு கிழக்கில் உள்ள பாடசாலைகளுக் கிடையிலும் கழகங்களுக்கிடையிலும் 40 ஓவர்கள் கிரிக்கெட் போட்டிகளை நடத்த தீர்மானித்துள்ளது. மாகாண வெற்றிக் கிண்ணத்துக்கான இப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கில் கிரிக்கெட்டின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் அமைச்சின் செயலாளர் திரு.ஈ.ஜே சற்குணராசாவின் பணிப்பின் பேரில் சிரேஷ்ட செயலாளர் திரு. கே. சந்திரராசாவின் ஆலோசனையின்படிமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் திரு. எஸ். மரியதாஸ் அவர்களும் உதவிப் பணிப்பாளர் திரு ஏ. எஸ். குணரத்தினம் அவர்களும் இதற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இப்போட்டி சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டமொன்று இன்று 25 ஆம் திகதி மாலை 3 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் சிரேஷ்ட செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ் மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் விளையாடும் பாடசாலைகளின் அதிபர்கள். விளையாட்டுத்துறை ஆசிரியர்கள், கழகங்களின் செயலாளர்கள், தலைவர்கள் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

கலந்துரையாடல் கூட்டத்தின் போது கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமும் சமூகம் அளிப்பார். (இ-மு)

## மட்டுநகர் அணி வெற்றி

குருநகர் மே 25

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்திற்கும் மட்டுநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் மட்டுநகர் அணி 2 கோல்கள் போட்டு வெற்றியீட்டியது. குருநகர் விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

ஏ. அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் தலா ஒவ்வொரு கோல்கள் போட்டு வெற்றி தோல்வி இன்றி ஆட்டம் முடிவடைந்தது. (இ-51)

## இல்லப் போட்டி

மாங்குளம், மே 25

மாங்குளம் ஒலுமடுப் பாடசாலை வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிபர் திரு. வி.இராசகுலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக முல்லை மாவட்ட விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு.ஏ. கே. மகாலிங்கமும் சிறப்பு விருந்தினராக மாங்குளம் கொத்தணி அதிபர் திரு. ஏ. சண்முகரத்தினமும். கலந்து கொண்டனர். (ப-94)

## நிவாரணம்

கோப்பாய், மே 23

உரும்பிராய் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சேதமடைந்த 51 வீடுகளுக்கு புனர்வாழ்வுத்திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (இ-72)

---

## விசேட அறிவித்தல்

மானிப்பாய் சோதிவேம்படி காளி காதேவி ஆலய மண்டப திருப்பணிகள் யாவும் 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பூர்த்தியாகி விட்டது.

பிரஸ்தாப மண்டபத்துக்கென இப்போது நிதி எதுவும் சேகரிக்கப்படவில்லை. ஆகவே எவரிடமும் மண்டப நிதிக்கெனப் பணம் அன்பளிப்புச் செய்ய வேண்டாமென அடியார்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல் தருபவர்:
தா. முத்துக்குமாரசாமி
சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.

(13273)

---

## விற்பனைக்கு

1. "USHA" Bottle Coolers
2. "GLACIO" Fridge, மண்ணெண்ணெயிலும் மின்சாரத்திலும் இயங்கக் கூடியது
3. Remington, Olivetti, Kofa & Underwood Typewriters
4. நகைக்கடை அல்லது ஆய்வு கூடங்களுக்கு உபயோகமான தராசுகள்
5. Hot Air Ovens
6. மேசைகள், ஸ்ருல்கள், சாப்பாட்டு அலுமாரிகள்
7. Air Conditioner
8. ஹோட்டல்களுக்கு உகந்த Sanyo இறைச்சி அரைக்கும் மின்சர் மற்றும் பல

### ஜெயாஸ் ஒக்ஷன் மாட்

161, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

[3625]

---

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



விஜயம்:
25 - 10 - 1971

பயணம்:
06 - 06 - 1989

திதி:-
26 - 05 - 1990

### ஏரம்பமூர்த்தி விஜயமூர்த்தி

(ராஜன் - விசு)

நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே
நீ இங்கில்லாத துன்பம் பெருகுதே

பன்னிரு திங்கள் புயலெனப் போயின
பெற்ற எம் நெஞ்சிலோ போகாது துயரம்
இன்னொரு பிள்ளை இவன்போல் எமக்கினி
இல்லை யென்றெண்ணி ஏங்குது நெஞ்சம்
பன்னரும் கலைகள் பழுதறக்கற்றனை
பெற்றவர் உற்றவர் பேர்பெற வாழ்ந்தனை
இன்னொரு நாட்டவன் எம்மிடை புகுந்திட
எழுந்தனை இடியென எம் தமிழ் புலியென
கண்ணரும் தாயகம் காத்திடச் சென்றனை
கண்மணியே நாமுனை நினையாத நேரமுண்டோ

வரும் 26 - 05 - 90 சனிக்கிழமை (நாளை) வி. எம். வீதி. பருத்தித்துறை இல்லத்தில் நடைபெறும் ஆண்டு திவசத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணாக்கள், அக்காக்கள்,
அத்தான், மருமகன் விநோத், அம்மம்மாக்கள், அன்ரியாக்கள், பெரியப்பா, பெரியம்மா,
கக்கண்டையா, மாமா, மாமி,
மற்றும் உறவினர்.

தகவல்:-
வி. கே. ஏரம்பமூர்த்தி,
வி. எம். வீதி,
பருத்தித்துறை.

(13214)

---

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட

# குருநகர் மீனவர் நினைவாக கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

குருநகர், மே 25

ஸ்ரீலங்கா இராணுவத்தால் 1986 ஆம் ஆண்டு மண்டைதீவில்வைத்துப் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களது நான்காம் ஆண்டு நினைவாக ஆறு பேர் கொண்ட விலக்கல் முறை (ஓவர்கேம்) கரப் பந்தாட்டப் போட்டிகள் மின்னொளியில் நடை பெறும்.

குருநகர் சனசமூக நிலையம் புனித சூசையப்பர் விளையாட்டுக்கழக அனுசரணையுடன் ஜூன் மாதம் 1-ஆம் திகதியில் இருந்து போட்டி தினமும் மின்னொளியில் குருநகர் சனசமூக நிலையக் சரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறும்.

ஒரு சனசமூக நிலையம் இரண்டு அணிகள் என்ற முறையில் யாழ்மாவட்ட சனசமூக நிலையங்கள் போட்டிகளில் பங்குபற்றலாம்.

விண்ணப்பங்கள் இன்று 25 ஆம் திகதிக்கு முன்பாக அனுபப்பட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. (இ-51)

---

## 3 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



அமரர்

### செல்லத்துரை இராசகுமாரன் (வவி)

(மில் உரிமையாளர்)

அன்னைமடியில் 1947 - 02 - 07
அரக்கர் அழிப்பு 1987 - 05 - 25

இராக்கத அழிப்பால் இன்னுயிர் இழந்த இராசகுமார இனியவனே - இராப்பகலாய் வராத செல்வம் வருவித்தோய் வானுலகம் தராநின்ற சாந்தியது காண்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்
(3629)

---

## மூவாண்டு நினைவு நாள்



செல்வன்

### இராஜதுரை ராஜேந்திரபோஸ்

(போஸ்)

(யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி உயர்தர மாணவன்)

அன்னையின் மடியில்: 03 - 12 - 1969
அரக்கர் அழிப்பில்: 25 - 05 - 1987

திதி:-22 - 05 - 1990

எங்கள் இனிய செல்வ மகன் ராஜனே!
எருமையில் ஏறிவரும் கூற்றுவன் தருணம் பார்த்து
பொம்பரில் வந்து அருமையான மகனே உம்மை
இரக்கமின்றி கவர்ந்து விட்டானே!
சிதையில் ஏறியதோ உமது சதையுருவம் தானே!
மகனே சிதைகிறதே எமது இதயம் உமது நினவால்,
வட்டமிட்டுச் சிறகடிக்கும் சிட்டுப்போல்
பவனிவரும் பால்வடியும் முகத்தினை இனி
எப்போது காண்போம்
எங்களை எல்லாம் ஆறாத்துயரில் தவிக்கவிட்டுச்
சென்று மூவாண்டு காலம் சென்று விட்டதுவே!
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உமது நினைவால் வருந்தும்
அப்பா, அம்மா, சுபாஸ்அண்ணா,
கண்ணா[ஜேர்மனி], தங்கை, தம்பி
உறவினர்கள், நண்பர்கள்.

சறோஜா தங்கமாளிகை,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(3635)

---


வெளிநாட்டில் உள்ள

உங்கள் உறவினர்களுக்கு

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக

★ கடிதங்கள் ★ பார்சல்கள்
★ தஸ்தாவேஜுகள்

ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

DHL International Ltd.

C/o Cosmos Marketing Services Ltd.

337, Kasturiar Road, Jaffna.

(சி/4530)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

யாங்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

**பொருள்:**

யாம் பட்ட துன்பங்களைத் தாம்படாமையால் அறிவில்லாதவர்யாம் கண்ணால் காணுமாறு எம் எதிரில் எம்மைக் கண்டு நகைக்கின்றனர்.



# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

25 - 05 - 1990 த. பெ இலக்கம் 25



## வெளிநாட்டுக் காசோலைகள்

வெளிநாடுகளில் இருந்து வடபகுதிக்கு அனுப்பப்படும் காசோலைகள் கையாளப்படுவது பெரும் தொந்தரவு. இதனால் வடபகுதி மக்களுக்குப் பெரும் பண இழப்பும், கஷ்டங்களும் ஏற்படுகின்றன.

சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் வெறும் சட்டங்களை — விதிகளை — இயற்றிக் குளிரேற வைத்துவிட்டுப் பார்த்துக் கொண்டிருக்க —

திட்டம் போட்டுத் திருடும் கூட்டம் திருடிக் கொண்டிருக்கிறது. சட்டமும் அதனை அமுல் செய்வதற்காக மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் வாங்கும் அதிகாரிகளும் உதவி அற்றவர்களாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இறுதியில் பாதிக்கப்படுபவர்கள் மக்கள்.

வெளிநாட்டுக் காசோலைகளைத் திட்டமிட்டுத் திருடுபவர்களால், மோசடி செய்து மாற்றுபவர்களால், நீண்ட காலமாகப் பெருமளவில் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மக்கள். அதனால் திருடர்களையும், மோசடிப் பேர்வழிகளையும் மடக்கிப் பிடித்து நடவடிக்கை எடுப்பதில் தீவிரத்தை, அக்கறையை போதிய அளவில் காணமுடியவில்லை!

அண்மையில் வெளிவந்த செய்தி ஒன்றின் பிரகாரம், வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட காசோலைகளைத் திருடி ஒருவர் எட்டு லட்சம் ருபா ஏப்பம் விட்டிருப்பது தெரிய வந்தது. இது வெளிச்சத்துக்கு வந்த ஒன்று. இதனைப் போல் இன்னும் எத்தனை மோசடிப் பேர் வழிகள் எத்தனை கோடி ருபாவைச் சுருட்டினார்களோ யார் அறிவார்!

வெளிநாட்டுக் காசோலை மோசடி விவகாரத்தில் இரண்டு வகைகள் உண்டு. காசோலையை வைத்து அனுப்பும் கடிதம் உரியவருக்குச் சேராமல் இடைநடுவில் மோசடிப் பேர்வழிகளின் கைக்குப் போகிறது. காசோலைகளில் இருக்கும் பெயருக்குரியவர் தாங்கள் என்று பொய்த் தகவல்களைக் கூறி மோசடிக்காரர்கள் காசோலையைப் பணமாக்கி விடுகிறார்கள். இந்த மோசடி அனேகமாகக் கொழும்பிலேயே நடக்கிறது கொழும்பில் உள்ள வங்கிகளும் பாவங்கள். அவையும் ஏமாற்றப்படுகின்றன.

இந்த முதல் ரக மோசடியில், தபாற்பகுதியினதும், வங்கிகளினதும் ஊழியர்களுக்கும் பங்கு இருக்கலாம் என்ற சந்தேகம் எழுவது இயல்பு. அது குறித்துப் பொலீசார் இதுவரை ஏதாவது விசாரணையை, துப்புத்துலக்குதலை திட்டமிட்ட அளவில் செய்திருக்கிறார்களா என்பது கேள்விக்குறி.

வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் காசோலை உரியவருக்கு வந்து, அவர் அதனை மாற்றுவதற்கு முன்னர் மோசடிப் பேர்வழிகள் மாற்றி விடுகிறார்கள். இது இரண்டாவது ரகம். இது விடயத்தில் வங்கி ஊழியர்களுக்கும் ஒரு பங்கு இருக்கும் என்றும் சந்தேகிக்க இடமுண்டு. ஆனால் அதனைக் கண்டறிய சட்ட அமுல் அதிகாரிகள் முயற்சி செய்தார்களா என்பதும் கேள்விக்குறி.

தமிழர்களுக்குரிய பணத்தை எவரும் கையாடலாம், கேட்க எவருமில்லை என்ற ஒரு நிலைப்பாடுடன் வெளிநாட்டுக் காசோலை மோசடி பல வருடங்களாக நடந்து வருகிறது. இதனை சம்பந்தப்பட்ட பகுதியினரின் குறிப்பாக, இரகசியப் பொலீசாரின் இயலாத்தன்மை என்று சொல்வதைவிட, தமிழர்களின் பொருளாதாரத்தை மேலும் ஒடுக்குவதற்கான ஒரு சதி என்றே கொள்ள வேண்டி உள்ளது.

முறைப்பாடு வந்தால்தான் விசாரணை செய்ய முடியும் என்று கூறி அரசாங்கம் தப்பிக்க முயலக்கூடாது. பத்திரிகைகளில் இவை சம்பந்தமாக வெளிவரும் செய்திகளை ஆரம்பப் புள்ளிகளாக வைத்து மோசடிக்காரர்களை கண்டுபிடிக்க பொலீசார் முயற்சி செய்ய வேண்டும். இல்லையேல் இரகசியப் பொலீஸ் பகுதியை, வெறும் அரசாங்க அரசியல் உளவறியும் ஸ்தாபனமாகவே கருதவேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் இப்போது வங்கிகள் சீராக இயங்குகின்றன. எனவே வெளிநாடுகளில் உறவினர்கள் இருப்பவர்கள் இங்குள்ள வங்கிகளில் கணக்கைத் தொடங்கி, அந்தக் கணக்குப் பெயரில் பணத்தை வெளிநாட்டில் செலுத்தினால் மோசடிக்காரர் வலையில் சிக்குவதைத் தவிர்க்கலாம்.

காசோலை, டிராப்டுகளாக அனுப்பிப் பணம் பறிபோன பின்னர் தலையில் கையை வைக்காமல், தமிழர்கள் தங்கள் பணத்தைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதே புத்திசாலித்தனம்.

## தெற்கில் லொறி கடத்த முயன்ற மூன்று தமிழர்கைது

[கொழும்பு மே 25

தென்பகுதியில் இருந்து வட.பகுதிக்குலொறி ஒன்றைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் தமிழ் இளைஞர்கள் மூவரை சிலாபம் பொலீஸார் கைது செய்தனர்.

சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

பிலியந்தலையைச் சேர்ந்த தயானந்த என்பவரது லொறியை கற்கள் ஏற்றுவதற்காக இனந்தெரியாத மூவர் வாடகைக்கு அமர்த்திச் சென்றனர்.

தெதுரு ஓயாபாலம் அருகே வந்ததும் இரவு 8 மணியளவில் லொறியின் சாரதியையும் கிளீனரையும் தாக்கி மரம் ஒன்றில் கட்டி வைத்துவிட்டு லொறியைக் கடத்திச் சென்றனர்.

சாரதியும் கிளீனரும்கட்டுக்களை அவிழத்து ஒருவாறு தப்பிச் சென்று சிலாபம் பொலீஸில் முறையிட்டனர்

நொச்சியாகம என்னும் இடத்தில் வைத்து லொறி மடக்கிப்பிடிக்கப்பட்டது. சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டனர். (இ-எ)

# சட்டவிரோத வேலை வாய்ப்பு ஏஜென்சிகளுக்கு 5 வருடச்சிறை ரூ. 1லட்சம் அபராதம்

## புதிய சட்டமூலம் தயாராகிறது

கொழும்பு மே 25

தொழில் திணைக்களத்தின் உத்தரவுப் பத்திரம் (லைசென்ஸ்) இல்லாமல் சட்டவிரோதமாக இயங்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏஜன்சிகளை நடத்துவோருக்குஐ 'து வருடச்சிறைத் தண்டனையும் ஒரு லட்சம் ருபா அபராதமும் விதிக்கப்படும்.

அத்தோடு சட்டவிரோதமாக ஏஜன்சி நடத்தியதாகக் கண்டு பிடிக்கப்படுவோர் அதன் பின்னர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜன்சி நடத்த எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

இவ்வாறு பல கண்டிப்பான சரத்துக்களைக் கொண்ட புதிய சட்டமூலம் ஒன்றைத் தொழில் அமைச்சு இப்போது தயாரித்து வருகிறது.

பிரஸ்தாப சட்டமூலம் அனேகமாக ஆகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறியவருகிறது.

இதே வேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெறுவோருக்கு வேலைகொள்வோர் விமானப் பயணச்சீட்டு இலவசமாக வழங்க வேண்டும். ஆனால் பல ஏஜன்சிகள் விமானச் சீட்டுகளுக்குப் பணம் அறவிடுகின்றன. இது விடயத்திலும் தொழில் திணைக்களம் இனிமேல் மிக கண்டிப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

தொழில் அமைச்சர் திரு. ரி. எம். பிரேமச்சந்திரா, மத்திய கிழக்கு நாடுகளுக்கு எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி விஜயம் செய்து அங்கு இலங்கையர் வேலை வாய்ப்பு பெறுவது சம்பந்தமான சூழ்நிலைகளைக் கண்டறிவார். (அ-2)

## பண்ணிசைப் போட்டி

சாவகச்சேரி. மே 25

பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவுக் கோயில்களது பிரார்த்தனைக் குழுக்களுக்கான பண்ணிசைப் போட்டி 27 ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை பளை இரட்டைக் கேணிஅம்பாள் கோயிலில்முற்பகல்9 மணிக்கு நடைபெறும். (ப-31)

## சைவசமய பாட பரீட்சை பரிசளிப்பு

யாழ்ப்பாணம், மே 25

கொழும்பு விவேகானந்த சபையினால் 1989 ஆம்ஆண்டு நடத்தப்பட்ட அகில இலங்கைச் சைவசமய பாடப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவருக்கு பரிசளிக்கும் வைபவம் நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு நடைபெறும்.

கொழும்பு விவேகானந்த சபைத் தலைவர் வைத்திய கலாநிதிக. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வடமாநிலக் கல்விப்டணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம், பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவார்கள். (இ-7)

## சந்தா அறவிடும் முயற்சியில் இஸ்லாமிய ஆசிரியசங்கம்

இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தில் உறுப்பினர்களாகவுள்ள ஆசிரியர்கள் பலர் நீண்டகாலமாக சந்தா செலுத்தாது இருப்பதால் அவர்களிடமிருந்து சந்தாக்களை அறவிடுவதில் அக்கறை செலுத்துமாறு சங்கத்தின் சகலகிளைகளுக்கும்அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கப் பொருளாளர் ஜனாப் ஏ. எம். இப்றாகீம் இது தொடர்பான அறிவுறுத்தல் கடிதங்களை சகல கிளைத் தலைவர்களுக்கும் செயலாளர்களுக்கும் மத்திய நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

சங்கப்பிரமாணப்படி 'ஒரு வருடச் சந்தா செலுத்தாத ஓர் உறுப்பினர் வருடாந்தப் பொதுக்கூட்டங்களில் கலந்து வாக்களிக்கவோ, அல்லது நிருவாக சபைக்குத் தெரிவு செய்யப்படவோ, பதவி வகிக்கவோ தகமை இழந்தவராவார்' எனவும்

சங்க உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியப்பிரமாணப்படி தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் சந்தா செலுத்திய வரது பிள்ளைகளுக்கே புலமைப்பரிசில் வழங்கப்படுவதுடன், சந்தா செலுத்திய உறுப்பினர் விகிதாசாரத்திற் கேற்பவே புலமைப்பரிசிலாளர் தொகை கிளைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-14)

## பாடசாலைக் களவுகளை ஒடுக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம் மே 25

பாடசாலைகளில் இடம் பெறும் களவுகள், கொள்ளைகளைத் தடுக்க பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திக் கழகங்கள், பிரஜைகள் குழுக்கள் என்பன முன்வர வேண்டும்.

வடமாகாண கல்விப் பணிப்பாளரும் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளருமான திரு இரா. சுந்தரலிங்கம் மேற் சண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமீபத்தில் யாழ் நகரப் பாடசாலைகள் சிலவற்றில் இடம் பெற்ற களவுகள் தொடர்பாகவே கல்விப் பணிப்பாளர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (இ-9)

## பதவி உயர்வு

முல்லைத்திவு மே 25

26 வருடசேவையின் பின்பு அளம்பில் கிராம சேவையாளர் திரு. ந. அருணாசலம் முல்லை மாவட்ட அரச அதிபர் பிரிவின் தலைமைச் செயலகக் கிராம சேவையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். (ப-92)

## கலந்துரையாடல்

வட்டுக்கோட்டை , மே 25

யாழ். கச்சேரி அதிகாரிகள், சங்கானை உதவி அரச அதிபர், சர்வோதய உத்தியோகத்தர்கள் ஆகியோரைக் கொண்ட கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகிலமைந்துள்ள வள்ளியம்மை ஞாபகார்த்த நிலையத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலுக்கு மேற்படி நிலையத்தலைவர் திரு. நா. இராசரத்தினம் தலைமைவகிப்பார். ( -161)

## வேம்படியில் சாரணியர் போட்டி

யாழ்ப்பாணம், மே 25

யாழ் மாவட்ட சாரணிய குழுக்களிடையிலான பல் திறன் போட்டிகள் ஜூன் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 – 30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான இறுதித் திகதி இம்மாதம் 28 ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பங்கள் யாழ் மாவட்ட ஆணையாளர் திருமதி தே. அரியரத்தினத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. ( இ )

## செய்திக்கொத்து

### முல்லைத்திவில் இணக்க மன்றுகள்

ஒட்டுசுட்டான், மே 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தமிழீழ இணக்க மன்றங்களை அமைக்கிறது.

திருத்தம் செய்யப்பட்ட புதிய யாப்புக்கு அமைய இம் மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. விரைவில் மக்களது முறைப்பாடுகள் ஏற்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படும் என முன்னணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ப-113)

### கோலக்கண்காட்சி

கோப்பாய், மே 25

வட கோவை இளைஞர் கழகம் மாத நடுப்பகுதியில் கோலக்கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது. (இ-72)

### சாரண ஆசிரியருக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், மே 25

சாரணர், குருளைச் சாரணர் ஆசிரியர்களுக்கான ஆதாரப் பயிற்சி கலைக் கூறு 1க்கான பயிற்சியை யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் அடுத்த மாதம் நடத்தும்.

இதில் பங்கேற்க விரும்புவோர் இம்மாதம் 29 ஆம் திகதிக்கு முன்விண்ணப்பிக்குமாறு உதவி மாவட்ட சாரணர் ஆணையாளர் திருமதி ம. கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (ப – 7)

### முல்லைத்திவும் வெறிச்சோடியது

முல்லைத்திவு, மே 25

முல்லைத்தீவில் முல்லைநகர், தண்ணீரூற்று, முள்ளியவளை என்பன உட்பட்ட சகல இடங்களும் திங்கள் ஹர்த்தாலை முன்னிட்டு வெறிச்சோடிக் கிடந்தன. ( ப - 92 )

## சமய சந்நிதியில்

### ராசகோபுர கும்பாபிஷேகம்

கொழும்புத்துறை மே 25

துன்னாலை வடக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் ராசகோபுர கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 13 ஆம் திகதி நடைபெறும். (ப-30)

### வருடாந்த உற்சவம்

வட்டுக்கோட்டை, மே 25

வட்டுக்கோட்டை கோவிலுக்கு அருகிலுள்ள சின்னக் கதிர்காமம் சுப்பிரமணியர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும். (இ-161)

## உடுவில் நூலகக்கண் காட்சியும் கலாசார நிகழ்ச்சியும்

மானிப்பாய், மே 25

வலிகாமம் தெற்கு உடுவில் உப அலுவலக பொது நூலகத்தினர் எதிர்வரும் ஜூலை மாதத்தில்நூலகக் கண்காட்சி ஒன்றையும், கலாசார நிகழ்ச்சி ஒன்றையும் நடத்த உள்ளனர்.

நூலகக்கண்காட்சிக்குதாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திரு. அநு. வை. நாகராஜனும், கலாசார நிகழ்ச்சிகளுக்கு உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை துணை அதிபர் திரு. வி. பரிபூரணானந்த சர்மாவும் பொறுப்பாக இருப்பார்.

உடுவில் உப அலுவலக பொறுப்பதிகாரி திரு. இ. கணேஸ்வரன் தலைமையில் கண்காட்சியும், கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெறும். கலாசார நிகழ்ச்சி சம்பந்தமாக உடுவில்உப அலுவலகத்துக்குட்பட்ட சனசமூகநிலையங்கள் மாதர் முன்னேற்ற சங்கங்கள். கிராம முன்னேற்ற சங்கங்கள், கலை கலாசார அமைப்புகள் போன்றனபங்குபற்றமுடியும். நாடகம், கும்மி கோலாட்டம். தனிநடிப்பு. சரகம், நாட்டுக்கூத்து சீனடி சிலம்படி போன்ற நிகழ்ச்சிகளில் போட்டி நடைபெறும் எனவும், இவை கலை, இலக்கியம், சமயம், வரலாறு ஆகியவற்றை பிரதிபலிப்பனவாக அமையவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்பு உடுவில்உபஅலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். உரிய விண்ணப்பப் படிவங்களை மேற்படிகாரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-90)

## நாணய மாற்று விகிதம்

23-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ருபா | 230.29 | 231.25 |
| 100 | அமெரிக்க டொலர் | 3990.90 | 4003.75 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6761.91 | 6823.22 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2381.17 | 2414.09 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 703.54 | 720.52 |
| 100 | ஜப்பானிய யென் | [illegible] | 26.6577 |

## வாசகர் திருமுகம்

### ஏன் இந்தப் பாரபட்சம்?

22 ஆம் திகதிய உதயனில் கொழும்புத்துறை வாசியாகிய திருவாளர் டி. பி. இம்மானுவேல் என்பவரின் மனக்குறையை ''வாசகர் திருமுகம்'' என்னும் பகுதியில் பிரசுரித்து இருந்ததைக் கண்ணுற்றேன். எங்களைப் போல் ஆயிரமாயிரம் பாதிப்புற்றவர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மை.

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை கிழக்கில் எனது வசிப்பிடத்திலிருந்து கால் கிலோமீற்றர் தூரத்தில் இந்திய அமைதிகாக்கும் படை முகாம் இருந்தது. 10-10-1987 அன்று படை முகாமில் இருந்து ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன. எமது பகுதி மக்கள் உயிரை காப்பதன் பொருட்டு தூர இடங்களிற்குச் சென்று அகதிகளாக இருந்தனர். இப்படியாக இரண்டு மூன்றுமுறை எமது நிரந்தர இருப்பிடங்களை விட்டு வெளியேறி நஷ்டம் அடைந்தோம். இதை எமது கிராமசேவை அதிகாரி நன்கு அறிவார்.

மீளக்குடியமர்வு நிவாரணத்திற்காக உரிய முறைப்படி எமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தோம்.

எனது விண்ணப்பம் என்னவாயிற்றென்று யாழ் அரச அதிபர் அவர்களிற்கு மனுச் செய்திருந்தேன். எனது மனுவை விசாரணைக்கு எடுத்து இருப்பதாகவும் 11-04 89 அன்று உ. அ. அ பணிமனையில் நடைபெறும் விசாரணைக்குச் சமூகமளிக்கும்படியும் கோரப்பட்டு இருந்ததிற்கிணங்க அன்றைய தினம் அங்கு சென்றேன். அத்தினத்திற்கு முன்னைய தினம் 10-04-89 அன்று விசாரணை மேற்கொள்ள இருந்த மேலதிக அரச அதிபர் அவர்களின் அகாலமரணம் காரணமாக விசாரணை நடைபெறவில்லை. இதுவரை நிவாரணம் எதுவும் கிடைக்கவில்லை.

எம் போன்றவர்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணம் வழங்குவதற்கு தடையாக இருப்பது என்ன? ஏன் இந்தப் பாரபட்சம்?

க. இளையதம்பி
தெல்லிப்பழை

## கண்டதும் கேட்டதும்

வருங்காலத் தூண்களாக, நாட்டின் எதிர்காலச் சிற்பிகளாக சிறுவர்கள் வளர வேண்டும். இது சமூகத்தின் பொது விருப்பம் ஆகும்.

சிறுவர்களைப் பற்றிச் சிந்திப்பவர்கள் அவர்களின் இன்னொரு பக்கத்தைப் பார்க்கத் தவறிவிடுகிறார்கள்.

உதாரணத்துக்கு அண்மையில் நடந்த ஒரு சம்பவம்:

யாழ்ப்பாண நகரில் தொலைபேசிகள் சுமுகமாக இயங்கிக் கொண்டிருந்த நேரம் சுமார் 20க்கு மேற்பட்டவர்கள் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார்கள் சில உள்ளூர் உரையாடல்கள் வேறு சில வெளியூர் உரை யாடல்கள்.

சடுதியாக தொலைபேசிகள் ஸ்தம்பித்தன.

தொலைத் தொடர்பு ஊழியர்கள் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர். தொலைபேசிக் கம்பிகளை வெட்டிச்சுருட்டிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் கையும்மெய்யுமாகப்பிடிபட்டார்கள். அவர்கள்இருவருக்கும் வயது 12 தானிருக்கும்.

போராளிகளிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்களைப் போராளிகள் விசாரித்தனர். குற்றவாளிகள் என ஒப்புக்கொண்ட அவர்களை ஒரு வீட்டில் தடுத்து வைத்தார்கள். ஒரு வார காலத் தண்டனை இவ்வாறு வழங்கப்பட்டது.

இத் தண்டனை போதும் என்று கருதி ஒரு வாரத்தின் பின் ஒருமாலை நேரத்தில் இருசிறுவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் நேரே வீடு சென்றார்கள் என்றா நினைக்கின்றீர்கள்? இல்லை நேரே கோட்டைமுனியப்பர் கோயிலுக்குச் சென்றார்கள்.

உண்டியலை உடைத்தார்கள். பணத்தை எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

திரும்பவும் பிடிபட்டார்கள். தடைக்காவலில் வைக்கப்பட்டார்கள்.

இத்தகையவர்களைத் திருத்தும் வழி யாது?

இவர்களை ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் பொறியியலாளராக, வைத்தியராக, கணக்காளராக, சட்டத்தரணியாக, ஆசிரியராக வர வேண்டும் எனச் செய்யும் கற்பனைகள் வெறும் ஆகாயக் கோட்டைகள் ஆக வேண்டியது. தான்!

—செய்திலோலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. நூற்றாண்டு விழா சிறப்பு மலர் ( 1890 - 1990 )

## யாழ் வை.எம்.சி.ஏ. தலைவர் விடுக்கும் செய்தி

அனைவருக்கும் நல் வாழ்த்துக்கள் வரலாற்று முக்கியம் வாய்ந்த தினம் இந்நாள் என்பதுடன் உங்கள் பங்களிப்புக்காக நாம் எல்லோரும் நன்றி பாராட்டுகிறோம்.

இடிபாடுகள், சிதைவுகள் போரின் வடுக்களாக இன்னமும் அப்படியே நீடித்திருக்கின்றனவாயினும் யாழ்ப்பாணத்தின் சூழ்நிலையோ இப்பொழுது பயங்கரமானதாகவோ, பரபரப்பானதாகவோ இல்லை

எமது இயக்கமோ அனைத்துலக நிறுவனம் என்பதால் பல்வேறு கால கட்டங்களில் ஒரு சிலவாக அனைத்துலக வை. எம். சி ஏ கழகங்களின் நட்புறவுச் சமூகம் 1955 இலும், கொழும்பு 1982 இலும் யாழ்ப்பாணக் கல்லூரி வை. எம் சி ஏ 1984 இலும் தற்பொழுது நாம் 1990 நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாடுகின்றோம்.

உச்சத்தை எட்டும் நோக்குடன் எங்கள் அபிலாசைகள் எங்களை எப்பொழுதும் முன்னோக்காகவே உந்தியுள்ளன. ஒவ்வொரு கால கட்டத்திலும் கை கூடாத எதிர்பார்ப்புக்களால் எங்கள் முன்னேற்றம் சில கால கட்டங்களில் வருத்தம் தருவதாக இருந்ததுண்டு. ஆயினும் அசையாது நாம் முன்னோக்கியே சென்றுள்ளோம்.

எம்மிடம் நம்பிக்கையும், அயர்வோ சோர்வோ இல்லாத உற்சாகமும் இருக்கிறது. நல்லனவற்றையும், சிறந்தனவற்றையும் எதிர்கொள்ளும் தரிசனங்களை நாம் காண்கிறோம். எனவே நாம் முன்னேற்றப் பாதையில் சென்றாக வேண்டும். ஆயினும் மெய்யான முன்னேற்றப் பாதையில் இப்பொழுதே நாம் அடியெடுத்து வைத்தாக வேண்டும். தீர்க்க திருஷ்டியை ஆண்டவர் எமக்கு அருளியுள்ளார். விளைவுகள் குறித்து அலட்டிக்கொள்ளாது இறைவனிடம் ஒத்தாசையுடன் நாம் முயற்சியைத் தொடங்குதல் வேண்டும். அவ்விதமே செய்வோமாக.

கடவுளின் அருட் கொடையே எங்கள் வாழ்வு. அதனைக் கொண்டு நாம் செய்வது எதுவோ அதுவே இறைவனுக்கான எங்கள் அன்பளிப்பாகும்.

**சாம். எஸ். சதாசிவன்**

## விழாக் குழுத் தலைவரின் செய்தி

வை. எம். சி ஏ இன் நூற்றாண்டு விழாவை ஏறெடுக்கும் நிர்வாக தலைவர் தவிசாளர் என்ற முறையில் இந்த அறிக்கையை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் வை. எம். சி. ஏ இன்று தனது நூறு வருட சமூக சேவையை பூர்த்தி செய்துள்ளது. நாம் இக்கொண்டாட்டத்தில் ஆனந்தமுடன் பங்கு பற்றும் அதே வேளையில் இறைவன் எம் மீது பொழிந்த ஆசீர்வாதங்களுக்காகவும் நன்றி செலுத்துகிறோம். நாம் சமூகத்திற்கு ஆற்றிய இவ்வாண்டு திட்டமிட்டு ஆற்றப் போகின்ற செயற்றிட்டங்களை இப் பக்கத்திலே பார்க்கலாம். நூற்றாண்டு கால வரலாற்றுப் பெருமையில் திளைக்கும் நாம் எதிர் காலத்தையும் நினைவு கூருவோமாக. இன்னும் அநேகம் நிறைவேற்ற முடியும்; நிறைவேற்றப்படவும் வேண்டும். இன்னும் ஒரு சதாப்த கால சமூக சேவைக்கு நாங்கள் எங்களை அர்ப்பணிக்கிறோம்.

**எஸ். எம். வி: திசைநாயகம்**
**தலைவர் விழாக்குழு**

## வை. எம். சி. ஏ. தேசிய கவுன்சில் - வருடாந்த பொதுக் கூட்டமும் யாழ். வை. எம். சி. ஏ. யின் நூற்றாண்டுக் கூட்டமும்

**வெள்ளிக்கிழமை மே 25**

காலை 9.00 மணி — தேசியகவுன்சில் உத்தியோகத்தர் வருகை.
பி. ப. 4.00 மணி — மேசைப்பந்து, பாட்மின்ரன் இறுதிப் போட்டிகள்.
பரிசில் வழங்கல் - சகல நிகழ்ச்சிகளுக்கும்
*தலைவர்:* டாக்டர் ரி. டபிள்யு. ஜெயகுலராசா.
*பிரதமவிருந்தினர்:* திரு. எக்சித் பர்னாண்டோ, வை. எம். சி ஏ. க்களின் தேசிய கவுன்சில்தலைவர்

**சனிக்கிழமை மே 26**


காலை 7.00 மணி — பிரதிநிதிகள் சென் ஜோன்ஸ் கல்லூரி வருகை,
காலை 8.00 மணி — தேசியக் கவுன்சில் வருடாந்த பொதுக்கூட்டப் பதிவு.
காலை 8.10 மணி — படங்கள் திறப்பு.
காலை 8 30 மணி — வருடாந்தப் பொதுக்கூட்டப் பிரார்த்தனை.
*பிரதான உரை:* திரு ஜே.ஜி. அரசரத்தினம்.
காலை 9 15 மணி — தேசிய கவுன்சில் வருடாந்தப் பொதுக்கூட்டத் திறப்பு வைபவம்,
*ஆசியுரை:* திரு. எக்சித்பர்னாண்டோ, தலைவர், வை. எம். சி. ஏ. க்களின் தேசியக்கவுன்சில்.
*பதிலுரை:* திரு. சாம். எஸ். சதாசிவன், யாழ் வை. எம் சி. ஏ. தலைவர்,
காலை 9.45 மணிமுதல் பி. ப. 3 00 மணி வரை தேசியக்கவுன்சில் வருடாந்தப் பொதுக்கூட்டம்,
பி. ப. 4 00 மணி — யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. நூற்றாண்டுப் பொதுக்கூட்டம்.
*தலைவர்:* திரு. எஸ். எம். வி. திசைநாயகம் தலைவர் விழாக்குழு.
*பிரதமவிருந்தினர்:* மாட்சிமை தங்கிய நான்சி எம். ஸ்ரைல்ஸ், இலங்கையில் உள்ள கனேடியத் தூதர்.

**ஞாயிற்றுக்கிழமை மே 27**

காலை7.00 மணி —நற்கருணை ஆராதனை சென்ற் ஜேம்ஸ் சேர்ச், நல்லூர். பிரசங்கம்.
காலை 8 30 மணி — சென்ற் ஜேம்ஸ் சேர்ச் பாரிஷ் மண்டபத்தில் காலைப் போசனம்.
காலை 9.00 மணி — தேசியக் கவுன்சில் உத்தியோகத்தர் மற்ற வை. எம். சி.ஏ. க்களுக்கு செல்லுதல்.
பி. ப. 6.30 மணி — யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. நூற்றாண்டு விருந்து
*தலைவர்:* திரு எம். சாம் எஸ். சதாசிவன், யாழ்ப்பாண வை. எம், சி. ஏ. தலைவர்.
*பிரதமவிருந்தினர்:* திரு. அன்ரன் அல்பிரட், யாழ்ப்பாண அரசாங்க அதிபர்.
*இடம்:* யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி,

## யாழ். வை. எம். சி. ஏ.யின் வரலாறு

1962 டிசம்பர் 29இல் நடைபெற்ற புதிய கட்டடத் திறப்பு விழா யாழ் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இது பழைய சகாப்தத்தின் முடிவையும் புதிய ஒரு சகாப்தத்தின் ஆரம்பத்தையும் குறிக்கும் இக்கட்டடத்திற்கான அடிக்கல் காலம் சென்ற பிரதமர் கௌரவ டி. எஸ். சேனாயக்காவினால் நாட்டப்பட்டது. கட்டடம் கட்டி முடிய பத்து வருடங்கள் சென்றன. இவ்விடைக் காலத்தில் அரைவாசி முடிவுற்ற கட்டடத்திலும் அங்கத்தினரின் இல்லங்களிலும் சங்கக் கூட்டங்கள் நடைபெற்றன. சங்கத்தின் பெயரிலுள்ள கட்டட மொன்றில் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமென்ற ஆவல் விரைவில் நிறைவேறியது. கட்டடம் முடிய ரூபா 50,000/- மேலதிகமாகச் செலவிடப்பட்டது. இம் மேலதிக செலவு வங்கிக்கடனாலும் தர்மபுரம் நம்பிக்கை நிதியத்தின் உதவியாலும் ஈடுசெய்யப்பட்டது இக்கடனைக் கட்டி முடிக்க நீண்டகாலம் சென்றது.



யாழ். வை எம். சி. ஏ கட்டடம்

### முழு நேர ஊழியர்

புதிய கட்டடம் திறக்கப்பட்ட பின்னர் சங்கம் தனது நடவடிக்கைகளை புதிய துறைகளில் திருப்பியது அங்கத்தவர்களின் ஆதரவில் நடந்து வந்த சங்கம் இப்போது விஸ்தரிக்கப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்த தகுதியுடைய முழு நேர ஊழியரையும் அவருக்கு வழங்க வேண்டிய வேதனத்துக்குரிய பணத்தையும் தேட வேண்டிய தேவை ஏற்பட்டு அதற்கு முன்னுரிமையும் கொடுக்கப்பட்டது. இவ் வேண்டுதலுக்கு சகோதர கொழும்பு வை. எம். சி ஏ. செவிசாய்த்து தனது மூத்த செயலாளர் டபிள்யு. எம். எஸ். கிங்ஸ்பரி அவர்களை யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. க்குக் கொடுத்ததுமல்லாமல் அவருடைய வேதனத்தையும் அவர்கள் கொடுத்து யாழ் வை எம். சி. ஏ. இன் சுமையைக் குறைத்தனர். இவ்வுதவிக்கு முக்கியஸ்தாகளாக இருந்தவர்கள் தேசிய சபையின் செயலர் திரு. ஆர். ஒ. பியூவல் அவர்களும் கொழும்பு வை. எம். சி. ஏ. பொதுச் செயலர் எல். ஜி ஜி விஜயசிங்க அவர்களுமாவர். திரு. கிங்ஸ்பரி அவர்கள் தனது திறமை, நீண்ட அனுபவம், அர்ப்பணிப்பு என்ற பண்புகளால் சங்கத்தை நடாத்திச் சென்று 35 வருட சேவையின் பின்னர் ஓய்வு பெற்று தெஹிவளையில் வாழ்ந்து இனக் கலவரத்தின் பின் உசனுக்கு இடம் பெயர்ந்து இவ்வாண்டு ஜனவரியில் இறையடி சேர்ந்தார்.

1962 இல் திரு. எஸ். வி. அரியராஜா அவர்கள் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் ஓர் இளைஞர் நடவடிக்கைச் செயலாளராக முதலில் திரு. மாக்சஸ் நவரத்தினராஜா கிறிஸ்தவ வாலிபர் சங்க சம்மேளன நிதியுதவியுடன் நியமிக்கப்பட்டார். இவர் 5வருடங்கள் திறம்படச் செயலாற்றி கிறிஸ்வத வாலிப சங்கச் சம்மேளனத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டு அதன் பின் ஹொங்கொங் வை எம். சி. ஏ யின் நிகழ்ச்சிகளின் செயலாளராக நியமிக்கப்பட்டு சேவையாற்றினார். வை. எம். சி. ஏ. இயக்கத்துக்கு இவராற்றிய சேவை பிரசித்தமானதும் பிரபலமானதும் ஆகும்.

வை. எம். சி. ஏ. கட்டிடம் யாழ். செயலகத்தின் முன் அமைந்துள்ளதால் பல்வேறு கிறிஸ்தவ தாபனங்களும் விளையாட்டுச் சழகங்களும், செஞ்சிலுவைச் சங்கம் அகதி புனரமைப்பு நிறுவனம் 1983 கிறியோன் சங்க யாழ். பாசறை, யாழ். கிறிஸ்தவ சங்கம் எஸ்.சி. ஒ.பி.ஈ. நிறுவனம் யாழ். வைஸ்மென்கழகம் போன்ற வெகுஜன இயக்கங்கள் எங்கள் கட்டிடத்தில் கூட்டங்களை நடாத்துகிறார்கள்.

இப்படியான மக்கள் சேவை மன்றங்கள் எமது கட்டிடத்தில் சட்டடங்களையும் அவர்கள் செயற்பாடுகளில் சிலவற்றையும் நடத்துவது எமக்கு உறுதியையும் பலத்தையும் பொதுமக்களுக்கு நலனையம் கொடுத்து யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டபின்பு ஆர். எஸ். பியூவல் ஞாபகார்த்த மண்டபத்தை நூல் நிலையம் நடத்த யாழ். மாநகரசபைக்குக் கொடுத்ததனால் பொதுமக்களுக்கு அளப்பரிய சேவை ஒன்று கிடைத்தது.

1963 - 1980 வரையுள்ள காலங்களில் உள்ளகவெளியக விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் மேற்கத்தைய கர்நாடகஇசையில் திறமைகளை வெளியிடும் போட்டிகள், வேதாகம வினாப் போட்டிகள், சேக்ஸ்பியர்நாடகப்போட்டிகள்ஆகியன ஆரம்பிக்கப்பட்டதனால் வாலிபர் பலர் சங்கத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். இதனால் இளைஞர்கள் பல பொறுப்புக்களை ஏற்று நடத்தியதால் சமுதாயத்தில் தலைமை தாங்கி நடாத்தும் பயிற்சியையும் பெற்றனர். இளைஞர்களை ஒன்றிணைத்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றவும் தலைமை தாங்கவும் தங்கள் பொறுப்புக்களை இளைஞர்கள் உணரச் செய்த பெருமை இளைஞர் அமைப்புச் செயலர் மாக்கஸ் நடரத்தினராஜா அவர்களையே சாரும்.

### முழுநேர பொதுச்செயலாளர்

யாழ். வை. எம். சி.ஏ இன் வரலாற்றில் 1980 ஆம் வருடம் ஓர் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

ஒரு முழு நேர செயலரை நியமிக்க வருவாயின்றி கௌரவசெயலாளர்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்தசபை 1980இல் சிலயாப்புத் திருத்தங்களைச் செய்து ஒரு முழு நேர ஊழியனை நியமித்தது.

[5 ஆம் பக்கம் பார்க்க]

**எம். தம்பித்துரை**
பொதுச் செயலாளர்

## யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ.யின் நடைமுறையில் உள்ள சில நிகழ்ச்சிகள்

1. வருடாந்த பாசறை
2. உள்ளரங்கு விளையாட்டுகள்
3. ஷேக்ஸ்பியர் நாடக/ பேச்சுப் போட்டிகள்
4. கர்நாடக / மேலைத்தேச இசைப் போட்டிகள்
5. அரியாலை, இயக்கச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் பாலர் பாடசாலைகள்.
6. அரியாலை, இயக்கச்சி ஆகிய இடங்களில் தையற் பயிற்சி நிலையங்கள்.
7. பெற்றோரை இழந்த 25 பிள்ளைகளுக்கு மாதாந்தம் 150/- கொடுப்பனவு.
8. 5ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
   (1) யாழ்/ இந்துக்கல்லூரி
   (2) யாழ்/ இந்து மகளிர் கல்லூரி
   (3) யூனியன் கல்லூரிகளைச் சேர்ந்த மூன்று மாணவர்களுக்கு தலா ரூபா 1080/- வருடமொன்றிற்கு வழங்கல்


## மேலும் ஒரு சேவை

**யாழ். வை. எம். சி. ஏ. வர்த்தகக் கல்வி நிறுவனம்**

**வெகு விரைவில் ஆரம்பமாகிறது**

தமிழ் ஆங்கில மொழிகளில்:
தட்டச்சு — சுருக்கெழுத்து
இன்னும்
ஆங்கிலம் — கணக்கியல் வகுப்புகள்
ஆரம்ப நாளை எதிர்பாருங்கள்
விவரங்கள்:

பொதுச்செயலாளர்,
வை. எம். சி. ஏ., யாழ்ப்பாணம்.



## Message from Hon. President of Sri Lanka

I am happy to note that the Jaffna Young Men's Christian Association reaches its Centenary in May 1990. It is indeed a notable event in the history of any institution. During these long years large numbers of men and women have been influenced and fashioned by the high ideals of this institution.

The Jaffna Y. M. C. A. has a proud record of service. It has moulded the character of its members to lead disciplined, orderly and useful lives. It has been able to render yeoman service to the community as well as tc the whole country.

I wish the Jaffna Y. M. C. A. another hundred years of dedicated service to our country and our people.

**R. Premedasa**

9th December 1989

## Message from the President Of the National Council of YMCAs of Sri Lanka

On the occasion of the centenary of the Jaffna YMCA. I have great pleasure in sending this message.

The centenary of any organization is surely a historie occasion. The YMCA Movement came into Sri Lanka within 50 years of its birth in Europe and has made a significant contribution to the life of the people of our country. In fact, the Colombo YMCAs is the oldest YMCA with a continuous record in Sri Lanka. It is also on record that many YMCA were formed in Jaffna in and around this period, of which the Jaffna College YMCA was the first, and the second was the Jaffna YMCA.

The YMCAs in Jaffna under the leadership of the Jaffna YMCA had during the early part of this century, formed the first union of YMCAs in Asia. This example was imitated by many other regions and the YMCA Movement in Jaffna later became part of the larger YMCA family. The Jaffna YMCA has the distinction of having a continuous history of service to the Community though it did not have a permanent home till 1962, when it constructed the present building.

The leaders of the YMCAs of Jaffna should be congratulated for having been consistent in carrying on the work of the YMCA for many years with missionary zeal though they had to move from place to place renting buildings to carry on its work.

Over the years your YMCA has made a significant impact on the life of the people of Jaffna. As a Movement we have from time to time, had to respond to new challenges and new situations. I am sure it would be correct to say, the last 10 years have been one of the most trying for your Association. With the leader ship given by your successive Boards you have been able to keep your head above water and ride the storm. You have during this period of crisis continued to serve the people who have suffered. You have been tested to your limits and have come through with flying colours.

We all hope that this last decade of the 20th Century will see a restoration of peace in our nation when we will re-discover the values we havs always stood for. Undoubtedly there are new opportunities of service and new challenges to be met.

I take this opportunity to wish your Association every success as you face up to your responsibilities.

**Eksith C. Fernando**
President

SHABRA UNICO FINANCE LTD.

61, New Bullers Road, Colombo - 4 207, Power House Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ யாழ் வை. எம். சி. ஏ. நூற்றாண்டு விழா சிறப்பு மலர் ★

## செயற்படுத்தப்பட்ட திட்டங்கள்

1. 1500 பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம்
2. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழிற்பயிற்சிகள்
3. பாதிக்கப்பட்ட 90 குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது
   இயக்கச்சி 64: கந்தர்மடம் 7, குருநகர் 3, உடுவில் 2, தீவுப்பகுதி 14

## யாழ். வை. எம். சி. ஏ. நடாத்தும்

### சைக்கிள் ஓட்டப் போட்டி

**ஆண், பெண் இருபாலாருக்கும்**

**விண்ணப்பக் கட்டணம்: ரூபா 25/-**

1 ஆம் பரிசு: ஒரு துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு: ரூபா 1000/- பெறுமதியான பரிசு
3 ஆம் பரிசு: 500 ரூபா பெறுமதியான பரிசு

**மரதன் ஓட்டம் ஆண்கள்**

**விண்ணப்பக் கட்டணம்: ரூபா 25/-**

1 ஆம் பரிசு: 1500 /- பெறுமதியான பரிசு.
2 ஆம் பரிசு 1000/- பெறுமதியான பரிசு.
3 ஆம் பரிசு 500/- பெறுமதியான பரிசு
மேலும் பல ஆறுதல் பரிசுகள்.

**விண்ணப்ப முடிவு திகதி: 16- 06 - 1990**

மேலதிக விவரங்களுக்கு:

பொதுச்செயலாளர்,
வை. எம். சி. ஏ.,
யாழ்ப்பாணம்.

## பணிப்பாளர் சபை

திரு. சாம். எஸ் சதாசிவன். தலைவர்
,, எஸ். எம். வி. திசநாயகம். உப தலைவர்
,, கே. என். வை. மொறிஸ். உப தலைவர்
,, எஸ். கிங்ஸ்லி சுந்தரலிங்கம், பொருளாளர்
,, எம். தம்பித்துரை. பொதுச் செயலாளர்

**உறுப்பினர்கள்**

,, ஜே. ஜி. அரசரெத்தினம். உறுப்பினர்
,, எஸ். ஜி. தேவா. உறுப்பினர்
கலாநிதி எஸ். தேவசகாயம். உறுப்பினர்
வைத்திய கலாநிதி ரீ. டபிள்யூ. ஜெயக்குலராஜா. உறுப்பினர்
திரு. எஸ். பி. ஜீவானந்தன் உறுப்பினர்
,, எம். பரராசசிங்கம். உறுப்பினர்
,, எ. ஜே. கதிர்காமர். உறுப்பினர்
,, செ. ம. தம்போ. உறுப்பினர்
,, எல். ஆர். முத்தையா. உறுப்பினர்
வண. ஜி. டி. ஆனந்தராஜன். உறுப்பினர்
திரு. எம். சி. பிரான்சிஸ். உறுப்பினர்
,, டி. ஜே. பத்மநாதன் உறுப்பினர்

## எமது 1990/ 91 ஆண்டுத் திட்டங்கள்

1. பாலர் பராமரிப்பு நிலையம் (1-4 வயது)
2. வயோதிப இல்லம்
3. திருநெல்வேலி கிழக்கில் தெரிவு செய்த கிராமம் ஒன்றை முன்னேற்றுவது.
4. திருநெல்வேலியில் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் வை. எம். சி. ஏ. கிளை ஸ்தாபனம் அமைப்பது.
5. அரியாலையில் வை. எம். சி. ஏ விளையாட்டு நிலையம் அமைப்பது
6. இயக்கச்சியில் குடியேற்றிய மக்களுக்கு தொழிற்பயிற்சி
7. தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல், பேச்சு ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்க வகுப்புக்கள் யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. இல் ஆரம்பித்தல்.

## வை. எம். சி. ஏ.யின்---

( 4 பக்கத் தொடர்ச்சி)

திரு. எம் தம்பித்துரை முதல் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார். இவர் இந்தியா, பிலிப்பையின்ஸ் ஹொங்கொங் தாய்வான் ஆகியநாடுகளில் வேண்டிய பயிற்சிகள் பெற்றுள்ளார்.

இளைஞர்களுக்கு வேண்டிய உடற்பயிற்சி, விளையாட்டுச் சாதனங்களையும் அதற்குரிய இடத்தையும் கொடுக்க வேண்டுமென்று அதற்கென இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு அதற்கு R.O. பிழுவல் மண்டபம் எனப் பெயரிடப்பட்டது. இதற்குரிய நிதியை U.C. B.W.M. என்னும் நிறுவனம் வழங்கியது. இக்காலத்தில் திரு. ஜிம்மி, ஐ.இராஜரத்தினம் தலைவராக இருந்து திறம்படச் செயல்புரிந்தார். இக்கட்டடத்தின் கீழ்மாடி E.T.R றெஜிரோனல்ட் தேகப்பயிற்சிச் சாலையெனவும் மேல்மாடி ஜி. எஸ் அருளம்பலம் ஞாபகார்த்த நூல் நிலையமாகவும், ' Black, குடும்பத்தவரின் ஞாபகார்த்த வழிபாட்டுத்தலமாகவும் இடம் பெற்றது.

விடுதியிலிருந்து எதிர்பார்த்தளவு வருமானம் கிடையாமையினால் உண்டிச்சாலையின் ஒரு பகுதி பிரிக்கப்பட்டு வாடகைக்கு விடப்பட்டது மேலும் ஒரு கடைத்தொகுதியும் கட்டி வாடகைக்கு விடப்பட்டது. திரு. எஸ். எம். வி. திசநாயகம் அவர்களின் தொழில்நுட்ப உதவியும் திரு. ஜே, எம். சபாரத்தினம் அவர்களுடைய அயரா உழைப்பும் பாராட்டுக்குரியவை.

### பொதுமக்கள் தலைமைத்துவம்

பொதுமக்கள் தலைமைத்துவமே வை. எம். சி. ஏ க்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இத்தலைமைத்துவம் இல்லாது செயலற்றுப் போனவை பலவுண்டு. யாழ். வை. எம். சி ஏ. யைப் பொறுத்தவரையில் இச்சேவை அபரிமிதமாகக் கிடைத்தது. சென்ற 30 ஆண்டுகளில் அளப்பரிய சேவை செய்த சிலரைக் குறிப்பிட்டேயாகவேண்டும்.

திரு. ஜே. அரசரெத்தினம் காலம்சென்ற ஜே. எம். சபாரத்தினம் திரு. ஜே. ஐ. இராஜரத்தினம், காலம் சென்ற சி. ஈ. ஆனந்தராஜன் எஸ். பரமானந்தன், டபுள்யூ: ஏ. வால்டன் கியூ. என். ஆர். நதானியல் ஈ. ரி. ஆர். றெஜினோல்ட், திருவாளர்கள் பேராசிரியர் ஏணஸ்ட் ஏ. சம்பியன், எம். சி. பிரான்சிஸ், எஸ். எம். வீ. திசநாயகம் சாம். எஸ். சதாசிவன், காலம் சென்ற யே. எம். சபாரத்தினம் அவர்கள் 1960-1962, 1980-1983 ஆகிய இருதடவைகள் ஆற்றிய பணிகளில் வை. எம். சி, ஏ. யின் தற்போதைய கட்டிடங்களும் இயக்கச்சி விடமைப்புத் திட்டமும் நினைவு கூரத்தக்கனவாகும். இவரது அயாரா உழைப்புக்கும், தளரா நம்பிக்கைக்குமே இவைஞாபகச்சின்னங்களாகும். பொதுவாக இலங்கை வை. எம். சி. ஏ. இயக்கமும் குறிப்பாக யாழ். வை. எம். சி. ஏயும் இவர் சேவைக்கு என்றும் கடமைப்பட்டுள்ளன.



தொழிற் பயிற்சியில் ஈடுபடும் பெண்கள்

### அபிவிருத்தி - புனர்வாழ்வுத் திட்டங்கள்

1980 தொடக்கம் இன்று வரையுள்ள காலத்தில் வழமையான நடவடிக்கைகளுடன் சமூக அபிவிருத்தித் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. மறுபுறத்தில் பொருளாதார நெருக்கடி எங்களை வாட்டிற்று. இனக்கலவரங்களினால் எங்கள் விடுதி செயலிழந்தது. இருந்த பொழுதும் நாட்டின் நீரோட்டத்துடனிணைந்து சமூக அபிவிருத்தித் திட்டங்கள், தொழிற் பயிற்சித் திட்டங்கள், பாலர் அபிவிருத்தித் திட்டங்கள், பாலர் பாடசாலைகள், தையற் பயிற்சி நிலையங்கள் போன்ற திட்டங்களை ஆரம்பித்ததுடன் இனகலவரத்தால் பாதிக்கப்பட்ட 85 சிறார்களுக்கு HOMSA நிறுவனம் மூலம் நிதியுதவியும் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உடனடி நிவாரணமும் நிரந்தர புனர் வாழ்வுத்திட்டமும் வை. எம். சி. ஏ யைஈடுபடச்செய்தது. இத்திட்டத்தின் மூலம் இயக்கச்சியில் 40 ஏக்கர் காணி வாங்கப்பட்டு அதில் 90 வீடுகளும் கிணறுகளும் ஓர் பொது மண்டபமும் கட்டிக் கொடுத்தோம். இதற்குரிய நிதி கிறீஸ்தவ வாலிப சங்கங்களின் சம்மேளனம் ஒழுங்கு செய்து கொடுத்தது. யாழ் R. R. F 83 நிறுவனமும் நிதியுதவியது.

### வர்த்தக கல்வி நிலையம்

இந்த நூற்றாண்டு விழா வருடத்தில் 7 அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். அதிலொன்று இளைஞர்களை ஆங்கில தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து நெறிகளில் பயிற்றலாகும். இதற்குரிய தட்டச்சு இயந்திரங்கள் தளபாடம் முதலியவற்றிற்கு முதலீடாகத் தேவைப்பட்ட பணத்தை கேட்டு கனடா தூதரசத்துக்கு விண்ணப்பித்தோம். அதற்கிணங்க வேண்டிய நிதி எங்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கு நாங்கள் கனேடிய தூதருக்கும் கனேடிய மக்களுக்கும் நன்றியுடையோம்.

### இளைஞர் பயிற்சி நிலையம் பரந்தன்

கிறீஸ்தவ இளைஞர் தேசிய மன்றத்தில் திட்டங்களின் ஒன்று தான் இந் நிலையம். இங்கு விவசாயம் மாடு வளர்த்தல், பன்றி வளர்த்தல், உழவு இயந்திர ஓட்டுனர் பயிற்சி ஆகிய துறைகளில் வாலிபருக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. இதற்கு ஜேர்மனி வை. எம். சி. ஏ நிதியுதவி செய்கின்றது.

### வை. எம். சி. ஏ கட்டடத் திருத்த வேலைகள்

1987 இல் இந்தியா அமைதி சாக்கும் படையின் தாக்குதலுக்கு இலக்காகிச் சேத முற்றதில் எமது பணிமனையை பிறிதொரு இடத்திற்கு மாற்றினோம். சிதைந்த கட்டடத்தை திறந்த இ. அ. க. படையினரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு பதில் கிடைக்காததால் வை. எம். சி. ஏ உலக சம்மேளனம் புனர்வாழ்வுச் செயலர் திரு பிறாங் சேணி அவர்கள் எங்கள் கட்டிடத்தை நேரில் பார்த்து பொருளுதவியதால் நாங்கள் எங்களுடைய கட்டடத்தை திருத்தியுள்ளோம் இதற்காக வை. எம். சி .ஏ உலக சம்மேளனத்துக்கு எமது நன்றி உரித்தாகுக!

### நூற்றாண்டு விழா

1990 ஆம் ஆண்டுடன் 100 வருடங்கள் மக்களுக்குச் சேவையாற்றிய இனிய நினைவுகள் எங்கள் வெற்றி தோல்விகளை திரும்பிப் பார்க்கும் ஒரு சந்தர்ப்பமாகும்.

இச்சந்தர்ப்பத்தை எங்களுக்கு கொடுத்த இறைவனுக்கு எமது கனமும் துதியும் உரித்தாகுக. அதே வேளையில் இந் நீரோட்டத்தில் கலந்து கொண்டு சேவையாற்றிய சகலருக்கும் நன்றியும் உரித்தாகுக. ★

# புலிகளைச் சந்திக்க கருணாநிதி எந்த அடிப்படையில் இணங்கினார்?

## -கருப்பையா மூப்பனார் கேள்வி

திருச்சி மே 25

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை அல்லது அவரது உதவியாளர்களை சந்திப்பதற்கு முதலமைச்சர் கருணாநிதி எந்த அடிப்படையில் ஒப்புக்கொண்டார்?

இதனை மக்களுக்கு திரு. கருணாநிதி விளக்குவாரா?

இந்திரா காங்கிரஸ் தமிழகத் தலைவர்களில் ஒருவரான திரு. ஜி. கே. மூப்பனார் முன் கண்டவாறு கேள்வி எழுப்பியிருக்கிறார்.

திருச்சியில் செய்தியாளர் மத்தியில் பேசிய போது திரு. மூப்பனார் மேலும் சொன்னதாவது;

இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் ஆகியோருடனான பேச்சுக்கள் நடத்தும் தனது பணி முடிந்து விட்டதாக கருணாநிதி முன்னர் கூறியிருந்தார்.

இது சம்பந்தமாக பிரதமர் சிங் ஒப்படைத்த பணியைத் தான் முடித்து விட்டதாகவும் பந்து மத்திய அரசிடம் இருப்பதாகவும் கூறிய கருணாநிதி எந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளை சந்தித்துப்பேச இணங்கினார் என்பது ஆச்சரியம் தருகிறது.

கருணாநிதிக்கும்விடுதலைப் புலிகளுக்கும் இடையே சென்னையில் நடைபெற இருப்பதாகக் கூறப்படும் பேச்சுக்கள் பற்றி தனக்கு ஒன்றுமே தெரியாது என்று வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் கூறியுள்ளார். இச் சந்திப்புப் பற்றி மத்திய அரசுக்கு கருணாநிதி அறிவிக்கவில்லை.

இலங்கைப் பிரச்சினையில் திரு. கருணாநிதியின் நிலைப்பாடு நம்பகத் தன்மை உள்ளதாக என்றுமே இருந்தது இல்லை.

தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முகாம் எதுவும் இல்லை என்று கருணாநிதி கூறுகிறார்.

அப்படியானால் தஞ்சாவூர் மாவட்டத்தில் விபத்துக்குள்ளான ஜீப் ஒன்றில் வந்த இலங்கைப் போராளிகள் ஐந்து பேர் வயர்லெஸ் மூலம் தொடர்பு கொண்டு இன்னொரு வாகனத்தைத் தருவித்து அதில் ஏறிச் சென்றது எப்படி என்பதை முதலமைச்சர் விளக்குவாரா?

இப்படி திரு. மூப்பனார் கேட்டார். (இ-எ)

# "நல்லனவற்றைப் போற்றுகிறது பிள்ளைத் தமிழ் நூல்"

## நல்லை ஆதீன முதல்வர் பாராட்டு

யாழ்ப்பாணம் மே 25

"கடவுளை அடையும் ஒரே இலக்கையே நோக்கமாகக் கொண்டு பாடப்பட்டவையே பக்திப்பாடல் எனத்தக்கவை. அந்த வகையில் முழுமையாக நல்லனவற்றைப் போற்றியும் போலிகளைச் சாடியும் பாடப்பட்ட ஓர் இலக்கியமாக இப் பிள்ளைத்தமிழ் நூல் விளங்குகிறது."

இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்ற பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரத்தின் "செகராசப்பிள்ளையார் பிள்ளைத் தமிழ்" நூல் வெளியீட்டுவிழாவில் ஆசியுரை நிகழ்த்துகையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்,

"பல நூற்றாண்டு பழமை வாய்ந்த இந்தப் பழம் பதிக்கு பக்திக் கனிவுமிக்க இப் பிரபந்தம் சிறந்த ஓர் அணியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இக் கவிஞர் தொடர்ந்தும் சமய இலக்கிய பணி புரிய என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்." என்றார்.

கலாநிதி சபா ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில்கலாநிதி இ.பாலசுந்தரம் வெளியீட்டுரையும் கவிஞர் சோ.பத்மநாதன் புலவர் ஈழத்துச் சிவானந்தன், க. நாகேஸ்வரன் ஆகியோர் ஆய்வுரைகளும் நிகழ்த்தினார்கள்.

நூலாசிரியர் பதிலுரையும் நூற்பதிப்பாளர்களான இணுவில் கந்தசுவாமி கோவில் இளம் தொண்டர்சபைப் பிரதிநிதி திரு. சி. குகன் நன்றியுரையும் கூறினார் (க)


உ
சிவமயம்

★ விவாஹ சோபன விஞ்ஞாபனம் ★

அன்புடையீர்!
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் பிரமோதூத ஸு வைகாசி மீ 14 ஆம் உ (28-05-1990)
திங்கட்கிழமை பகல் 9.54 மணி முதல் 11.16 மணி வரையுள்ள
புனர்பூச நக்ஷத்திரமும் கர்க்கடக லக்கினமும் கூடிய சுப முகூர்த்தத்தில்

| எமது புத்திரன் சிரஞ்சீவி **சந்தானகுமார்** [சந்தானம்ஸ் போட்டோ] அவர்களுக்கு | எமது புத்திரி சௌபாக்கியவதி **யோகாம்பிகையை** |
| --- | --- |

அச்சுவேலி பத்தமேனிப் பிள்ளையார் கோவில் பிரம்மஸ்ரீ மு. சிவசுப்பிரமணிய சர்மா அவர்கள் இல்லத்தில், கன்னிகாதான பாணிக்கிரஹண திருமாங்கல்ய தாரணஞ் செய்ய விநாயகர், வில்லூன்றிக் கந்தன் திருவருளை முன்னிட்டுப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அச்சமயமும், சமாவர்த்தனம் வரவேற்பு உபசாரம் ஆகியவற்றிலும் தாங்கள் குடும்ப சமேதரராய் சமூகந் தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்!

| நீ. சிவசுப்பிரமணிய ஐயர் தம்பதிகள், (முன்னைநாள் பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி.) 'சிவ அம்பிகை வாசம்', அம்பலவாணர் வீதி, உடுவில். | பூரண தியாகராஜக் குருக்கள் தம்பதிகள், 'ராஜ் கமல்', கல்லடி. மட்டக்களப்பு. |
| --- | --- |

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| சமாவர்த்தனம்: | மணமகனில்லத்தில் | 28-05-90 | திங்கள் காலை | 6.00 மணி |
| வதூவர கிருஹப்பிரவேசம்; | ,, | 28 05-90 | திங்கள் மாலை | 4.00 மணி |
| வரவேற்புபசாரம்; | மணமகனில்லத்தில் | 29-05 90 | செவ்வாய் மாலை | 4.00 மணி |
| | மட்டக்களப்பு, மணமகளில்லத்தில் | 10-06-90 | ஞாயிறு மாலை | 4.00 மணி |

[இரு வீட்டார் அழைப்பு] (சி-4532)



# தெங்கு-பனை உணவு கம்பனி (வரை)

எமது நிறுவனம் வடக்கில் விவசாயம், விவசாய மூலப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய திட்டமிட்ட, நவீன நிர்வாக செயலாக்கத்தின் அடிப்படையில் பணிபுரிய அமைக்கப்பட்ட ஒரு பொது ஸ்தாபனமாகும்.

எமது முதலாவது செயல்திட்டமாக சிறு உற்பத்தியாளர்களை ஊக்குவித்து அவர்களின் உற்பத்தியை பெருக்கி விரிவாக்கும் பணியில் ஈடுபடவுள்ளோம்.

✶ எமக்கு யாழ் நகரசபை எல்லைக்குள் ஒரு நவீன செயலகம் அமைக்கக் கூடிய இடம் தேவை. அடிப்படை வசதியுடன் பிரதான வீதியை முகப்பாக கொண்ட வாகனங்கள் விட வசதியுள்ள இடமாக அமைய வேண்டும்.

✶ தயவுசெய்து இரண்டு வாரங்களுக்குள் தொடர்பு கொள்க:

தலைவர்:
தெங்கு - பனை உணவு கம்பனி
த. பெ. எண் - 93 யாழ்ப்பாணம்.

The Chairman
Palm Food & Beverages Co: Ltd.,
P. O. Box 93,
Jaffna.

(3624)



# VACANCIES

## Uduvil Girls' College

Teachers Of English:

1. English Trained Teachers
2. Graduate Teachers With English as a Subject For the degree.

Applications to be sent, before the 6 th of June 1990

to: The Principal
Uduvil Girls' College
Chunnakam

(சி/4534)



# அறிவித்தல்

## கோப்பாய் லயன்ஸ் கழகம்

27- 05- 1990 ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ மைதானத்தில் நடாத்த இருந்த அதிஷ்ரலாபச் சீட்டிழுப்பு எதிர்பாராத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இச்சீட்டிழுப்பு எதிர்வரும் 24- 06- 1990 ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும்.

உங்கள் ஆதரவுக்கு எங்கள் நன்றி!

செயலாளர்
வீ ஆர்: இரத்தினசிங்கம்

(13263)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது — விற்பனையாகின்றன

இலங்கை நிருவாக சேவை (SLAS)

**போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி**

* நுண்ணறிவு
* கிரகித்தல்
* விடய ஆய்வு / பொது வினாத்தாள்

பயிற்சிகளுடன் நடைபெற்ற பரீட்சைகளின் 7 வருட மாதிரி வினாத்தாள்களையும் - விடைகளையும் உள்ளடக்கியது.

அஸ்ரன் வெளியீடு விலை ரூபா 88.00

கேட்டு வாங்குங்கள்:

* மட்டுப்படுத்தப்பட்ட
* திறந்த

யாழ்நகரில் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்தமாகப்பெற:

**ASTAN Institute**

**166/1, Hospital Road, Jaffna.**

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

[சி-4561]

வெளிவந்துவிட்டது வாங்கிவிட்டீர்களா?

**ஞானக்கதிர்**

அன்பு - அறநெறி - ஆன்மீகம்

[வைகாசி மாத இதழ்]

சாயிபாபா சொன்ன கதை
யானையை அடக்கிய சாது
அமெரிக்காவில் ஒரு சிவாலயம்
பிராரத்துவ வினை......
(புராணக் கதை)
திருவடி வணக்கம்
வேதாந்த மரபு......
(சமயத் தொடர் கட்டுரை)
நாளை முதல் குடிக்கமாட்டேன்......
(சமூகச் சிறுகதை)
திருமந்திரம்
நாமார்க்கும் குடியல்லோம்

ஈழத்துத் திருத்தலங்களான;

- சிரணி நாகம்மை
- புங்குடுதீவு கண்ணகியம்மன்
- வண்ணை நாச்சிமார் கோயில்

அற்புதங்களுடன், வரலாறுகளும்......

* கலாநிதி சபா. ஜெயராசா
* ஆத்மஜோதி நா. முத்தையா
* கலாநிதி சுப்பிரமணியம்
* அழகு அருணாசலம்
* கலாநிதி வித்துவான் க. ந. வேலன்
* வில்வம் பசுபதி

ஆகியோரின் ஆக்கங்களுடன்
இன்னும் பல அம்சங்கள்.........

விலை ரூபா 7/- மட்டுமே!

— பிரதிகளுக்கு உங்கள் பகுதி உதயன் முகவர்களை நாடுங்கள் —

[சி-4531]

★ இஸ்ரவேல் நடத்தும்

# சோவியத் யூதர் குடியேற்றத்துக்கு கோர்பச்சேவ் பலத்த கண்டனம்!

## பலஸ்தீனியரின் உரிமையில் தலையீடு என்று அறிவிப்பு

மாஸ்கோ மே 24

இடம் பெயரும் சோவியத் யூதர்களை ஆக்கிரமிக்கப்பட்ட அரபு மண்ணில் குடியமர்த்துவதை சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

இந்த நடவடிக்கை சோவியத் யூனியனுக்கு எதிரானது என்றும் திரு. கோர்பச்சேவ் வர்ணித்தார்.

இடம்பெயரும் சோவியத் யூதர்களை இஸ்ரவேலுக்கு அனுப்புவது, அவர்களின் உயிருடன் விளையாடும் செயல் என்றும் திரு. கோர்பச்சேவ் தெரிவித்தார்.

பலஸ்தீனியர்களின் உரிமையைப் பறிக்கும் செயலாக யூதர் குடியேற்றத்தை மாஸ்கோ கருதுகிறது என்று திரு. கோர்ப்பச்சேவ் சுட்டிக் காட்டினார்.

இதனிடையில் — சோவியத் யூனியனில் இருந்து வெளியேறி வரும் யூதர்களை எகிப்து பிரதேசத்தின் ஊடாக இஸ்ரவேலுக்கு அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்ல அனுமதிப்பது இல்லை என்று எகிப்து அரசு முடிவு செய்துள்ளது. (எ)

★ அரபு மண்ணில் இடம்பெறும்

# யூதர் குடியேற்றத்தினால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும்!

## எகிப்து ஜனாதிபதி எச்சரிக்கை

கெய்ரோ, மே 24

இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப்பிரதேசங்களில் சோவியத் யூதர்களைக் குடியேற்றுவது மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்தும்.

எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் முன்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

கெய்ரோவில் ஆரம்பமான சோஷலிச சர்வதேச அமைப்பின் வருடாந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி முபாரக் முக்கிய உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர், "சோவியத் யூதர்களை அரபு மண்ணில் குடியமர்த்துவது, மத்திய கிழக்கு பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண உதவாது. பலஸ்தீனப் பிரச்சினை சமரசத் தீர்வு ஒன்றைக் காண முயற்சித்து மிதவாதக் கட்சிகள் மற்றும் சக்திகளின் நடவடிக்கைகளுக்கும் இது குந்தகம் விளைவிக்கிறது" — என்று சொன்னார்.

இதனிடையில் —

ஜோர்தான் பகுதியில் மேலும் ஏழு பலஸ்தீனியர்கள் இஸ்ரவேல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

# சோவியத் பொருளாதாரம் மாற்றி அமைக்கப்படும்

## கோர்பச்சேவ் அறிவிப்பு

மாஸ்கோ மே 24

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்ப்பச்சேவ் மிகவும் தீவிரமான பொருளாதாரக் கொள்கையை நாட்டில் அறிமுகப்படுத்தவிருக்கிறார்.

சந்தைப்படுத்தல் பொருளாதார முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முடியும் என்று திரு. கோர்பச்சேவ் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரே புதிய பொருளாதாரக் கொள்கை அமுல் நடத்தப்படும். அதற்கான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தப் போவதாக திரு. கோர்பச்சேவ் அறிவித்திருக்கின்றார். (எ)

★ தூதரகத்தை மூடும்

# பிஜியின் நடவடிக்கைக்கு இந்தியா கண்டனம்

புதுடில்லி மே 24

இந்தியத் தூதரகத்தை மூடும்படி பிஜி அரசு உத்தரவிட்டதை புதுடில்லி அரசு கண்டித்துள்ளது.

பிஜியின் உள்நாட்டு அலுவல்களில் தலையிடும் நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபடவில்லை. ஆனால் அங்கு வாழும் இந்திய வம்சாவழி மக்களின் நலன்கள் குறித்து அக்கறை கொண்டிருப்பதாக புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

தலைநகர் சுவாவில் உள்ள இந்தியத் தூதரகத்தைமூடி விடும்படி பிஜி அரசு நேற்று உத்தரவிட்டதுதெரிந்ததே!

இரண்டு வார கால எல்லைக்குள் சகல இந்திய ராஜதந்திரிகளும் ஊழியர்களும் நாட்டைவிட்டு வெளியேறி விடவேண்டும் என்றும் பிஜி அரசு மேலும் அறிவித்துள்ளது.

பிஜியின் உள் விவகாரங்களில் இந்தியா தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்ளுவதாகவும் அதனால்தான் இந்த கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பிஜி அரசு காரணம் காட்டியிருக்கிறது.

பிஜியில் உள்ள இந்திய வம்சாவழியினருக்கு தற்போதைய அரசு அரசியல் பாரபட்சம் காட்டுவதாக இந்திய அரசு இம்மாத ஆரம்பத்தில் பிஜி அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்திருந்தது.

1987 ஏப்ரல் வரை பிஜியின் ஆட்சி, இந்திய வம்சாவழியினரின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது.

பிஜியின் சனத்தொகையில் அரைப் பங்கினர் இந்திய வம்சாவழியினர். எஞ்சியோர் தான் பிஜி வம்சத்தவர்.

1987 ஏப்ரலில் பிஜி இராணுவத் தளபதி சித்திவேணி ரபுக்கா புரட்சி ஒன்றை நடத்தி இந்திய ஆதிக்கத்தில் இருந்த அரசாங்கத்தை கவிழ்த்தார்.

அன்றில் இருந்து இந்திய-பிஜி மக்களிடையே கருத்து மோதல்கள் மற்றும் வன்செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

பிஜியின் புதிய அரசியல் சட்டம் இந்தியரின் செல்வாக்கை மட்டந்தட்டி, பிஜி நாட்டினரின் கைகளுக்கு அதிகாரம் போகும் விதத்தில் [illegible] ளது. (எ)

# மக்கா செல்ல சோவியத் உதவி; முஸ்லிம்தலைவர்கள் வரவேற்பு!

மாஸ்கோ, மே 24

"சோவியத் யூனியனுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் நேரடி விமானப் போக்குவரத்து ஏற்பாடு செய்யுமாறு, சோவியத் விமானப் போக்குவரத்து நிறுவனமான ஏரோஃப்ளோட்டுக்கு சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் உத்தரவிட்டிருக்கிறார். இதை சோவியத்முஸ்லிம்கள் வரவேற்றார்கள்."

"இது முஸ்லிம்களின் புனிதத் தலங்களுக்கு விஜயம் செய்வதற்கு உதவியாக இருக்கும்" என்று மத்திய ஆசியாவின் முஸ்லிம் சபைத் தலைவர் முப்தி முகமது-சாதியோ முகமது- யூசுப் கூறினார்.

"அரசுக்கும் இறை நம்பிக்கை கொண்டவர்களுக்கும் இடையிலான உறவுகளில் நல்ல மாற்றங்களை உருவாக்க உதவும்ஆக்கபூர்வமான புதிய நடவடிக்கை இது என்று நாங்கள் கருதுகிறோம். இதனால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான சோவியத் முஸ்லிம்கள் மெக்காவுக்கு ஹஜ்யாத்திரை மேற்கொள்ள முடியும்" என்றும் அவர் சொன்னார். (எ)

# பாகிஸ்தான் நிலைமை பற்றி மன்னிப்புச் சபை அறிக்கை!

லண்டன் மே 24

பாகிஸ்தானில் மனித உரிமைகள் பேணப்படும் விஷயத்தில் அபிவிருத்தி காணப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தனது பிந்திய அறிக்கையில் தெரிவித்து உள்ளது.

1988 நவம்பரில் பெனாசிர் பூட்டோ பிரதமரானபின்னர் மரணதண்டனைவிதிக்கப்பட்டிருந்த சுமார் 2ஆயிரம் பேருக்கு ஆயுள்தண்டனை மற்றும் சிறைத்தண்டனை வழங்கப் பட்டது.

ஆயிரத்துக்கு அதிகமான அரசியல் கைதிகள் விடுவிக்கப் பட்டனர்.

இருந்தும் பாகிஸ்தானில் உள்ள பொலீஸ் நிலையங்களில் சில மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுக்கொண்டு தான் உள்ளன.

கற்பழிப்பு, கல்லால் அடித்துக் கொல்லுதல் ஆகியன இடம் பெறுகின்றன.

இப்படி மன்னிப்புச்சபை கூறியுள்ளது. (எ)

# அமெரிக்க தளங்கள்

சிங்கப்பூர் மே 24

பிலிப்பின்ஸில் அமெரிக்கத் தளங்கள் தொடர்ந்துஇருப்பதன்மூலமேஆசியாவின் ஸ்திர நிலை பாதுகாக்கப்படும்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அதிகாரி திரு. ரிச்சர்ட் ஆர்மிற்றேஜ் முன்கண்டவாறு தெரிவித்தார். (எ)

# ஆப்கன் அமைதியைக் குழப்பும் முயற்சியில் புஷ் - தாட்சர்!

## பிரிட்டிஷ் பத்திரிகை குற்றச்சாட்டு

லண்டன் மே 24

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுவரும் சகஜ நிலமையை பிரச்சாரஞ் செய்வதற்குப் பதிலாக மேற்குலகம் ஆப்கான் - பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியத்தில் போதைப் பொருள் பாவிப்பு, கடத்தல் ஆகியவற்றை ஊக்குவித்து வருகிறது.

இவ்வாறு பிரிட்டிஷ் பத்திரிகை இன்டிபென்டன்ட் எழுதியுள்ளது.

பெஷவார் நகருக்கு அருகே போதைப் பொருள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

50 கிலோ எடைகொண்ட போதைப் பொருள் சாக்குகளை இங்கு வாங்கமுடியும் எனவும் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

மேற்படி போதைப்பொருள்களை விற்கும் சந்தைகள் கிளர்ச்சிக்காரர்களின் முகாம்களைக் கொண்ட இடங்களில் உள்ளதாகவும் பத்திரிகை கூறியுள்ளது.

பஷ்டு இனம் பெருவாரியாக வாழும் பகுதி இவ்வருடத்தில் ஆயுதவிற்பனையின் ஒரு மையமாகவும் போதைப் பொருள் வர்த்தக -கடத்தல் கேந்திரமாகவும் அமைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன என்று முஜாஉறித்தீன் அரசாங்க அதிகாரி உறிதலாத் அர்கால் கூறியதாக பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

தட்சர், புஷ் இருவரும் ஆப்கான் அனுமதியை குந்தகப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் லண்டனிலும் வாஷிங்டனிலும் போதைப்பொருள் ஊடுருவலை அதிகரிக்கும் எனவும் இன்டிபென்டன்ட் எழுதுகிறது. (எ)

★ சுதந்திர பிரகடனம் தொடர்பான

# சில சட்டங்கள் இடைநிறுத்தம்; லித். நாடாளுமன்றம் முடிவு!

வில்னியஸ், மே 24

சுதந்திரப் பிரகடனத்தை ஒட்டி நிறைவேற்றப்பட்ட சில சட்டங்களை இடைநிறுத்தி வைப்பது என்று லித்துஏனியா நாடாளுமன்றம்கடந்த செவ்வாய்க்கிழமை தீர்மானித்தது.

சுதந்திரப் பிரகடனத்தால் எழுந்துள்ள நெருக்கடிகளை சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் பேச்சுக்கள் நடத்தித் தீர்வு காணுவதற்குமுதற்கட்டமாக லித்துஏனிய அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது.

பால்டிக்குடியரசு நாடுகளான எஸ்தோனியா, லற்வியா, லித்துஏனியா ஆகியன தாங்கள் நிறைவேற்றிய சுதந்திரப் பிரகடனங்களை இடைநிறுத்தம் செய்து, சோவியத் அரசின் சட்டங்களுக்கு உட்பட்டு நடந்தால் ஒழிய, அவற்றுடன் எந்தவித பேச்சுக்களையும் நடத்தப் போவதில்லை என்று அதிபர் கோர்பச்சேவ் நிபந்தனை விதித்திருந்தார்,

சுதந்திரப் பிரகடனத்தை இடைநிறுத்தம் செய்வதில்லை என்றும் லித்துஏனிய நாடாளுமன்றம் தீர்மானித்தது. (எ)

# பாக் தளபதியின் சீன விஜயம்

டோக்கியோ, மே 24

பாகிஸ்தான் கடற்படைத் தளபதி யஸ்ருர் எச் மலிக் சீனா சென்றுள்ளார்.

பீகிங்கில் உயர்மட்ட இராணுவத் தளபதிகளுடன் அவர் பேச்சுக்கள் நடத்தினார்.

பாகிஸ்தான் கடற்படைச்குத் தேவையான ஆயுதங்களைவாங்குவதே அட்மிரல் மலிக்கின் விஜயத்தின் நோக்கமாக அமைக்கின்றது என்று தெரிகிறது. (எ)

**HAYLEYS PHOTOPRINT (Private) LTD**

இனாம்! இனாம்! இனாம்!

இதோ வந்து விட்டது! AGFA COLOUR x R. G 100

காலா காலமாக நினைவில் நிற்கும் நிகழ்ச்சிகளை அழகிய வண்ணப் படமாக்குவதற்கு புத்தம் புதிய வடிவில் அழகிய வர்ணப்படச்சுருளை உள்ளடக்கிய Agfa Colour x R. G. 100 இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. Agfa Colour x R. G. 100 வாங்கும் ஒவ்வொருவருக்கும் இலவசமாக ஒரு அல்பம் கிடைக்கும்! Agfa Colour x R. G. 100 என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள்!

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

**CHRIS MARKETING ORGANISATION**

No. 380, Hospital Road,
JAFFNA.

- படச்சுருள்களை ஐந்தே நாட்களில் கழுவிப் பெற்றுக்கொள்ளலாம்.
- கீழ்க்கண்ட முகவரிகளிலும் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்

* சித்திராலயா ஸ்ருடியோ, இல. 18, ஸ்ரான்லி வீதி.
* ஞானம்ஸ் ஸ்ருடியோ, மணிக்கூட்டு வீதி.
* மரியநாயகம், கஸ்தூரியார் வீதி.

சுன்னாகம்

* பிறின்ஸ் ஸ்ருடியோ, கே. கே. எஸ். வீதி.
* துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் பஸ்நிலையம் முன்பாக.
* சுந்தரம் அன் சன்ஸ் கே. கே. எஸ். வீதி.

[சி-4569]

உ
சிவமயம்

★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருஷம் வைகாசி மாதம் 13 ஆம் நாள் (27 - 05 - 1990) ஞாயிற்றுக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும், சித்த யோகமும் சதுர்த்து திதியும் கூடிய சுபதினத்தில் காலை 10 30 மணி முதல் 2 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எங்கள் திருநிறைச் செல்வன் **மதிபாலன்** அவர்களுக்கும் | எங்கள் திருநிறைச் செல்வி **பாமினி** அவர்களுக்கும் |
| --- | --- |

கனடா, றிச்மண்ட்கில் ஸ்ரீ கணேசா ஆலய மண்டபத்தில் திருவருள் துணைகொண்டு திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்:

திரு. திருமதி க. மாணிக்கசிங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில், இலங்கை.

திரு. திருமதி மகேந்திரன்,
69/1, கொழும்புத்துறை வீதி, கண்டுக்குழி,
யாழ்ப்பாணம், இலங்கை.

(13253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தை விலைகள்

சன்ன(ாகம்), திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 16 00-18.00 | ரூ. 16.00-18.00 | ரூ. 18.00-20.00 |
| வாழைக்காய் | ரூ. 8.00- 6 00 | ரூ. 5.00- 7.00 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 12 00-16.00 | ரூ. 11.00-14 00 | ரூ. 18.00-20.00 |
| பாகற்காய் | ரூ. 14.00-16 00 | ரூ. 12.00-18 00 | ரூ. 18.00-20.00 |
| கோவா | ரூ. 12.00-16.00 | ரூ. 10.00-14 00 | ரூ. 16.00-18.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-24.00 | ரூ. 23.00-24.00 | ரூ 20.00-24.00 |
| சரட் (மலைநாடு) | ரூ. 20.00-22 00 | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-22.00 |
| பீற்றூட் | ரூ. 8.00-10 00 | ரூ. 7.00-10.00 | ரூ. 13.00-15.00 |
| பீன்ஸ் | ரூ. 20.00-24 00 | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-24 00 |
| பூசணி | ரூ. 4.00- 6 00 | ரூ. 3 00- 5.50 | ரூ. 5.00- 6.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 16.00-18.00 | ரூ. 12.00-16.00 | ரூ. 18.00-20.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 50.00-55.00 | ரூ. 45.00-53.00 | ரூ. 50.00-60.00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 30.00-40 00 | ரூ. 28 00-40.60 | ரூ. 45.00-50.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 30.00-32.00 | ரூ. 29.00-32.00 | ரூ. 32.00-34.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 8 00-10 00 | ரூ. 6.00- 9.00 | ரூ. 10.00-12.00 |
| வெண்டைக்காய் | ரூ. 16.00-20.00 | ரூ. 14.00-20 00 | ரூ. 18.00-20.00 |



பளை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பத்துப்பேர் கொண்ட சாரணர் அணி தேசிய வீரர் தினமான கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவை சுசரித்த வாசஸ்தலத்தில் சந்தித்து சமாதானச்செய்தியை கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

இக் குழுவின் தலைவர் திரு. மா. புவனேந்திரன் மற்றும் உறுப்பினர்கள் கே. சுந்தரலிங்கம், எஸ். விக்னேஸ்வரன் பி. பவளானந்தன், என். கிருஷ்ணமூர்த்தி ஆகியோரையும் சாரணர் இயக்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. டொட்வெல் றொட்றிக்சோ, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் திரு. நெவில் பியடிகம ஆகியோரையும் படத்தில் காணலாம். (இ)

# அமெரிக்காவில் உயர் கல்வி பரந்த நோக்கில் அபிவிருத்தியாகிறது

## புத்தகக் கண்காட்சியில் உபவேந்தர்

யாழ்ப்பாணம், மே 25

''அமெரிக்காவில் உயர் கல்விக்கான வாய்ப்புகள் இறுக்கமாக அமைவதில்லை. மாறாக இவை மாணவர்களது சுதந்திரமான தெரிவுகளாக இருக்குமாறு உயர்கல்வித்துறை அங்கு பரந்த நோக்கில் அபிவிருத்தி அடைந்து வருகிறது''

''அமெரிக்க உயர் கல்வித் துறையில் ஏற்படும் மாற்றங்கள்'' என்ற பொருளில் அமெரிக்கத் தகவல் நிலையமும் யாழ் பொது நூலகமும் இணைந்துபுத்தகக்கண்காட்சி ஒன்றை நடத்துகின்றன. பிரஸ்தாப புத்தகக்கண்காட்சி கடந்த புதன்கிழமை நாவலர் மண்டபத்தில்ஆரம்பமானது.

அதனை விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் திரு. அ. துரைராஜா முன்கண்டவாறு கூறினார்,

இக் கண்காட்சியில் அமெரிக்க உயர்கல்வித்துறைகள், பல்கலைக்கழகங்கள் கல்லூரிகள், சமூகக்கல்லூரிகள் என்பவை குறித்து விளக்கம் அளிக்கும் புத்தகங்களும் படங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன

உப வேந்தர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

இலங்கையில் உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றுவோரில் 98.2 வீதத்தினர் தமது பெரு முயற்சியின் பயனை அடைய முடியாமல் போகிறது. அதாவது அவர்கள் அனைவரும் பல்கலைக்கழக உயர் கல்வி பெறமுடியாது விடுபடுகின்றனர்.

ஆனால் அமெரிக்காவிலோ பல்கலைக்கழக நுழைவு வீதம் 12 ஆக இருக்கிறது. இதன் அர்த்தம் அனுமதி பெறாதுவிட்டவர்களுக்கு உயர்கல்விக்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்பதல்ல. அங்குள்ள கல்லூரிகள், சமூகக்கல்லூரிகள்(COMMUNITY COLLEG-ES) என்பன ஏனையமாணவர்கள் தமது உயர்கல்வித்தேவையை பூர்த்தி செய்ய வழிஅமைக்கின்றன.

இந்நிலை இங்கு எம் நாட்டிலும் ஏற்படவேண்டும். அப்போதுதான் உயர்கல்வி என்பதற்கான அர்த்தம் முழுமை பெறும்.

கொழும்பிலும், கண்டியிலும் உள்ளது போல யாழ்ப்பாணத்திலும் அமெரிக்கத் தகவல் நிலையம் தனது கிளையைத்திறக்க வேண்டும்—என்று கேட்டுக் கொண்டார்.

திரு ஹொரஸ் உரையாற்றிய போது, கடந்த கால அசம்பாவிதங்கள் காரணமாக தான் இங்கு அடிக்கடி வர முடியாது இருந்ததெனக் குறிப்பிட்டு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரது வேண்டுகோள் கவனத்தில் கொள்ளப்படும்எனத் தெரிவித்தார்.

கண்காட்சி ஆரம்பமாகு முன்னர்யாழ். மாநகரசபைஆணையாளர் திரு பி பாலசிங்கம், திரு. ஹொரஸ்ஸுக்கு மாலை சூட்டி வரவேற்றார்.

இங்கு வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள்தரும்தகவல்களின்படி அமெரிக்க உயர்கல்வித் துறையில் பொறியியல் பிரயோக விஞ்ஞானத்தில் 3000 கற்கை நெறிகளும் உயிரியல் விவசாய விஞ்ஞானத்தில் 4000 கற்கை நெறிகளும் மற்றும் வர்த்தக சுகாதார சட்டக் கற்கை நெறிகளில் 42,000 பிரிவுகளும் போதிக்கப்படுகின்றன எனத் தெரியவருகிறது.

பிரஸ்தாப புத்தகக் கண்காட்சியை நாளை வரை இலவசமாகப் பார்வையிடலாம்.

இலங்கைக்கு அடுத்தபடியாக இக் கண்காட்சி பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடைபெற உள்ளது. (அ-ப)

## இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்படுவர்.

அவர்களுக்கு சேவைக்காலத்தைக்கணித்து, பணிக்கொடை மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.

போக்குவரத்து சேவை ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும். மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துசேவையின்முகாமைத்துவத்தில் அரசு தலையீடு இருக்காது. மக்களே நிர்வாகத்தை நடத்துவர்.

இத்திட்டத்தைச் செயல்படுத்த உலகவங்கி 60 கோடி ரூபாவை உதவ முன்வந்துள்ளது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவையின் நிர்வாகத்தை ஊழியர்கள் பொறுப்பேற்பதற்கு முன்னர் போக்குவரத்து சபைக்கு ஏற்பட்ட கடன்கள் மற்றும் கொடுப்பனவுகளை அரசே பொறுப்பேற்கும்.

இப்படி அமைச்சர் விஜேபால மென்டிஸ் தெரிவித்தார். (இ-எ)


# COMPUTER PROGRAMMING COURSES

| | Commencement | Days | Time |
|---|---|---|---|
| BASIC (Week - end Batch) | 26 - 05 - 90 | Sat.<br>Sun. | 8.30 — 10.30<br>1 30 — 3.30 |
| BASIC (Week - Day Batch) | 06 - 06 - 90 | Tue.<br>Thu. | 10.30 — 12.30<br>10.30 — 12.30 |
| LOTUS 1, 2 3 | 28 - 05 - 90 | Mon.<br>Wed. | 10.30 — 12.30<br>10.30 — 12.30 |
| d. BASE III + | 29 - 05 - 90 | Tue.<br>Thu. | 10.30 — 12 30<br>10.30 — 12.30 |
| WORD - PROCESSING | 30 - 05 - 90 | Wed.<br>Fri. | 8.30 — 10.30<br>8 ·0 — 10.30 |

★ Lectures by Members of the Institute of Data Processing Management (London) ★ More hours of practicals ★ Attractive fees ★ Fees in Instalments ★ Explanations in Tamil ★ Valuable certificate

**Note:** Personal Classes for Professionals.

C.I.M.A, I.D.P.M, A.A.T, I.A.B
Classes are Commencing on 02-06-90

# SCHOOL OF BUSINESS ADMINISTRATION

Leaders in Computer Education)
16, 3rd Cross Street, JAFFNA.


## புலிகள்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குச் கூறியிருக்கிறோம்.

சுதந்திரமான தேர்தல் பலகட்சி அடிப்படையிலேயே நடத்தப்படவேண்டும்.

**ஈ. பி. ஆர், எல். எவ்வுடன்**

அந்த அடிப்படையிலேயே ஓர் அரசாங்கம் என்ற முறையில் ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் பேச்சு நடத்துகிறோம்.

நாம் யாருடன் பேசுவது என்பது குறித்து விடுதலைப் புலிகளோ அல்லது வேறு யாருமோ எமக்கு நிபந்தனை விதிக்க முடியாது. நாம் எல்லோருடனும் பேசுவோம்.

விடுதலைப் புலிகள் மாத்திரம் தான் இந்த நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் பேசமுடியும் என்று நாம் நினைக்க (வில்லை).

ஏழு குழுக்கள் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்காக தாங்கள் போராடுவதாகத் தெரிவிக்கின்றன.

இத்தகைய குழுக்கள் இன்று நாடாளுமன்றத்திலும் இருக்கின்றன.

ஆகவே ஜனநாயக வழியில் பிரச்சினையை அணுகும் போது அரசாங்கம் அவர்கள் அனைவருடனும் பேசவேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறது.

அந்த அடிப்படையில் தான் ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் அரசு பேச்சு நடத்துகிறது.

அரசு— ஈ பி. ஆர். எல். எவ். பேச்சுக்கள் குறித்து விடுதலைப் புலிகள் வெளியிடும் கருத்துகள் தவறானவை.

எந்த விடயம் குறித்தும் விடுதலைப் புலிகள் தமது கருத்தை பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதே.

ஈ. பி. ஆர். எல். எவ். முகாம்கள் எதுவும் அரசாங்கத்தின் பாதுகாப்பில் அல்லது கண்காணிப்பில் இல்லை. அரசாங்கம் அவர்களுக்கு பயிற்சியளிப்பதாகக்கூறப்படுவதுதவறானது

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் புலிகள் தங்கள் ஆட்களை ஒரு கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம்.

சில பிரச்சினைகளை இரகசியமான முறையில் தான் நாம் தீர்க்கவேண்டியிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

தமிழர் பிரச்சினை பற்றிப் பேசித் தீர்ப்பதற்கு சரியான இடம் சர்வகட்சி மாநாடு தான். இதனைத்தான் ஈ பி. ஆர். எல். எவ்விடமும், விடுதலைப் புலிகளிடமும் தெரிவித்திருக்கிறோம்.

ஈ. பி. ஆர். எல். எவ்வினர் வெறுமனே கடிதங்கள் எழுதுவதையும், அறிக்கைகள் விடுவதையும் விடுத்து சர்வகட்சி மாநாட்டுக்கு வந்து தங்கள் கருத்துக்களைக் கூறட்டும் — இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (அ-உ-2)

## கைதான---

பட்டு கடத்தல் பொருள்கள் படகு என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

இவர்கள் நேற்று முன்தினம் இலங்கைப் பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களுடன் கைதான இலங்கையரான ரம்ஸீன் என்பவர் 10 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார்,

இந்தியர்கள் விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்(துச் செல்லப்பட்டுள்ளனர்) என்று தெரிவிக்கப்பட்டது

# டெங்கு, கொரியன் காய்ச்சலுடன் மற்றும் ஒரு காய்ச்சல் பரவுகிறது

கொழும்பு, மே 25

நாட்டில் மூன்று வித காய்ச்சல்கள் பரவுவதாக அறிவிக்கப்படுகிறது.

டெங்கு, கொரியன் ஆகிய காய்ச்சலுடன் இன்னுமொரு இனந்தெரியாத காய்ச்சலும் பரவுவதாக வைத்திய ஆராய்ச்சி இன்ஸ்டிடியூட் பணிப்பாளர் டாக்டர் திஸ்ஸ விதாரண சொன்னார்.

புதிய காய்ச்சல் பிலிப்பீன்ஸ், வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா ஆகிய நாடுகளில்

இது உயிர்கொல்லி காய்ச்சல் அல்ல என்றாலும் நோயாளரை வாட்டி வதைத்து விடுகிறதாம்.

ஓர் ஆளில் இருந்து மற்ற ஆளுக்கு இப்புதுக்காய்ச்சல் தொற்றுகிறது.

இது பரவ நுளம்பு காரணமல்ல என்றும் பணிப்பாளர் சொன்னார்.

கொரியன் காய்ச்சலால் கொழும்பில் ஒரு குழந்தை இறந்தது.

டெங்கு காய்ச்சலால் சிறுநீரகம், ஈரல் ஆகியன பாதிக்கப்படுகின்றன. (இ-எ)

அரச அடக்குமுறைக்கு எதிராக

# தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவது தவறானதல்ல!

## நாடாளுமன்றத்தில் மாவை சேனாதிராஜா

கொழும்பு, மே 25

ஆயுதமற்ற பூமியாகவே எமது பிரதேசம் இருக்க வேண்டும் என விரும்புகிறேன். ஆனால் அரசு நடத்தும் அக்கிராமங்களுக்கு எதிராக அரசுக்கு சமமான பலம் பொருந்தியவர்களாக தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவது தவறில்லை என்பதை கொள்கையளவில் ஏற்றுக்கொள்கிறேன்.

-இவ்வாறு கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. மாவை சேனாதிராஜா.

நேற்று நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அவர் சபையில் மேலும் கூறியதாவது:-

இலங்கைப் படை மீண்டும் தாக்கும் என்ற பயம், பதற்றம் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது

ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டு சகஜ நிலையை ஏற்படுத்த முயல வேண்டும்.

அரசிடம் விடுதலைப் புலிகள் நம்பிக்கை இழந்து விட்டதாகத் தெரிகிறது. தமிழ் மக்களை அழிக்க மீண்டும் தனது படைகளை அரசு ஏவிவிடுமானால் தமிழ் மக்களும் தமது ஆயுத பலத்துடன் அதனை எதிர்க்க வேண்டியிருக்கும்.

நான் அஹிம்சை வழியில் நம்பிக்கை கொண்டுள்ளவன்.

என்றாலும், தமிழ் மக்கள் ஆயுதப்படையினரால் தாக்கப்படும் சூழ்நிலை ஏற்படுமானால் அந்த நிலையில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தாமல் இருக்க வேண்டும் என்ற முடிவை நான் ஆதரிக்க முடியாது.

புலிகள் பல தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். ஏனைய குழுக்களும் தியாகங்கள் செய்திருக்கின்றன. இந்தத் தியாகங்கள் எல்லாவற்றுக்கும் மாகாணசபை பரிசு அல்ல.

எம்முடன் எமது இனத்தையே மோதவிட்டு, தமிழ் இனத்தை அழிக்கும் செயல்பாடுகளுக்கு தீவிரவாத இயக்கங்கள் பலியாகக் கூடாது.

-இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-2)

## கட்டுத்துவக்கு வெடித்து சிறுவன் பலி!

வல்வெட்டித்துறை, மே 25

இரு சிறுவர்கள் வீட்டில் இருந்த கட்டுத்துவக்கை எடுத்து விளையாடிய போது அது வெடித்து சிறுவர்களுள் ஒருவன் பலியானான்.

கடந்த செவ்வாய்க்கிழமை முறிகண்டியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முறிகண்டி இந்துப்பாடசாலையில் ஆறாம் ஆண்டில் கல்வி பயின்ற கருப்பையா கணேசன் என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். (உ-160)

## வடக்கு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யக்கா மாவத்தையில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பில் தங்கி நின்றதற்கு நியாயமான காரணங்களை சந்தேக நபர்கள் தெரிவிக்கவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அவர்களின் கைவிரல் அடையாளங்கள், புகைப்படங்கள் எடுக்கப்பட்டு தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

இன்று வெள்ளிக்கிழமை வரை சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்கும்படி கடந்த செவ்வாய்க்கிழமை நீதிவான் உத்தரவிட்டார். (இ-எ)

## சபாநாயகர் கவலை

கொழும்பு, மே. 25

விடுதலைப்புலிகள் இயக்கம் பற்றிய கேள்விகளுக்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா பதிலளிக்க மறுத்தது நாடாளுமன்ற வரலாற்றிலே கவலைக்குரிய சம்பவமாகும் என்று சபாநாயகர் நேற்றுத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருவர் விடுதலைப்புலிகளைச் சம்பந்தப்படுத்தி கேட்ட கேள்விக்கு பதிலளிக்க முடியாது என்று கூறி அமைச்சர் ரஞ்சன் நேற்று முன்தினம் சபையிலிருந்து வெளியேறியது தெரிந்ததே.

சபையின் கௌரவத்துக்கு அமைச்சர் மதிப்புக் கொடுத்திருக்க வேண்டும் என்று சபாநாயகர் கூறியபோது—

அதனை எதிர்க்கட்சி எம். பிக்கள் மேசை மீது தட்டி வரவேற்றனர். [அ-எ]

## அவசரகாலம் நீடிப்பு

கொழும்பு, மே 25

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 56பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஆவரவாக 118 வாக்குகளும் எதிராக 63 வாக்குகளும் கிடைத்தன.

சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச அணி ஆகியன எதிர்த்து வாக்களித்தன

வாக்களிப்பு நடந்த சமயம் தமிழர்விடுதலைக் கூட்டணி, ஈரோஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றை சேர்ந்த எம். பிக்கள் சபையில் இருக்கவில்லை. (உ-எ)

## சபையில் ஜனாதிபதியின் மனைவி

கொழும்பு, மே 25

ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாச நேற்று நாடாளுமன்ற நடவடிக்கைகளை சிறிது நேரம் கவனித்தார்.

சபாநாயகர் கலரியில் இருந்து அவர் சபை நிகழ்ச்சிகளைப் பார்த்தார். (அ-எ)

## பயங்கர கோஷ்டி கைது

ஆறு கொலைகள், 51 கொள்ளைகள், ஆறு கற்பழிப்புச் சம்பவங்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பானதாகக் கருதப்படும் ஒன்பது பேர் கொண்ட பயங்கரக் கோஷ்டி ஒன்றை எம்பிலிபிட்டியா பொலீஸார் கைது செய்தனர்.

எம்பிலியாப்பிட்டிய நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இக் கோஷ்டியின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன என்றும் சொல்லப்படுகிறது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

15 கிறாம்
அண்ணா கோப்பி
100 வீதம் சுத்தமானது

இது கைதேர்ந்த தொழிலாளர்களினால் காற்றுப் புகாவண்ணம் அடைக்கப்பட்ட பைக்கட்டுகளில் வெளிவருகிறது. இதை வாங்கிப் பாவித்து.

இதன் வெற்றுப் பைக்கட்டுகள் 25 கொடுத்து ஒரு அப்பியாசக்கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளவும்.

# உதயன்

25 - 05 - 1990 வெள்ளிக்கிழமை

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு உகந்தது.
"ஜீவாகாரம்"
இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளன.
அண்ணா தொழிலகம்
இணுவில்.

## மக்கள் வங்கி பிரதானவீதி: சனி - ஞாயிறு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 25
மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளையில் தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணமும் வீடு திருத்துவதற்கான நன்கொடைப் பணமும் கீழ்க்காணும் உதவி அரசாங்க - கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

சனிக்கிழமை (26 - 5 - 90) உதவி அரசாங்க அதிபர் பிரிவு வேலணை - (அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, வேலணை).

ஞாயிற்றுக்கிழமை (27 - 5 - 90)- உதவி அரசாங்க அதிபர் பிரிவு நல்லூர், (சந்தர்மடம், நல்லூர்). உடுவில், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, சங்கானை - (சுழிபுரம் கிழக்கு, வட்டுக்கோட்டை கிழக்கு)

அவ்வப்பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு வங்கிப் பிரிவு இலக்கத்தைப் பெற்று வருமாறு வேண்டப்படுகிறது. (இ)

## ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கி: நாளை கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், மே 25
நாளை சனிக்கிழமை இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் காலை 9 மணிமுதல் நண்பகல் 1 மணி வரை பின்வரும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன:-

**மீளக் குடியமர்தல் 2 ஆம் கட்ட நிவாரணம் ரூ.1000/-**
அரியாலை கிழக்கு, கோண்டாவில் கிழக்கு, திருநெல்வேலி மேற்கு, நல்லூர் வடக்கு, கொக்குவில் மத்தி, கந்தர்மடம், கொக்குவில் கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கொக்குவில் மேற்கு, வண்ணார்பண்ணை வட கிழக்கு, வண்ணார்பண்ணை வடமேற்கு, திருநெல்வேலி கிழக்கு, அரியாலை மத்தி.

**மீளக் குடியமர்தல் நிவாரணம் ரூ. 2000/-**
கொழும்புத்துறை, அத்தியடி, சுண்டிக்குழி, குருநகர் மேற்கு, குருநகர் கிழக்கு, யாழ் பட்டினம், அரியாலை மேற்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு.

**உற்பத்தித்திறன் வாய்ந்த நன்கொடைப் பணம் ரூபா 4000/-**
வண். வடமேற்கு, வண். வடகிழக்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, நல்லூர் தெற்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு (இ)

## 7ஆயிரத்து 946 பேர் இன்னும் தடுப்புக் காவலில்

கொழும்பு, மே, 25
இன்னும் 7ஆயிரத்து 946 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு உள்ளனர்.

இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

4, 404 பேருக்குபுனர்வாழ்வு அளிக்கப்பட்டது

சுதந்திர சரணடைவுக் குழுவிடம் 162 தீவிரவாத சந்தேக நபர்கள் சரணடைந்தனர்.

இதுவரை 1,876 துப்பாக்கிகளே ஒப்படைக்கப்பட்டன. இன்னும் 4 ஆயிரத்து 22 துப்பாக்கிகள் ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளது.

இப்படி அமைச்சர் விஜேரத்தினா சொன்னார். [இ-எ]

## கொக்குவில் இந்துக்கல்லூரி பரிசளிப்புவிழா 1990

காலம்:-
29-05-1990 செவ்வாய்க்கிழமை பி. ப. 2-00 மணி
இடம்:- கல்லூரி மண்டபம்

பிரதம விருந்தினர்:- திரு. கே. சுப்பிரமணியம் (பொறியியலாளர்)

பரிசு வழங்குபவர்:-
திருமதி சுகிர்தலக்சுமி சுப்பிரமணியம் (இளைப்பாறிய உப அதிபர், கொ. இ. கல்லூரி)

பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[சி/4535] அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## அதிஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

22 - 05 - 90 நாயன்மார் கட்டு துர்க்கை அம்மன் தேவஸ்தான முன்றலில் நடைபெற்ற மேற்படி சீட்டிழுப்பு முடிவுகள்.

1 ஆவது பரிசு A 2019
2 ஆவது பரிசு B 7706
3 ஆவது பரிசு B 19749

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

[1] A 14380 [2] A 24226 [3] A 9379
[4] B 5851 [5] B 18738 [6] A 16430
[7] A 29860 [8] B 10610 [9] A 17587
[10] C 30528

அதிஷ்டசாலிகள் தங்கள் பரிசிற்குரிய டிக்கட்டுக்களை பின்வரும் விலாசத்திற்கு சமர்ப்பித்துப் பரிசை பெற்றுக் கொள்ளலாம்.

**EUROPE CHINA HOTEL**
89, 2nd Cross Street,
JAFFNA.

(13274)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-05-1950 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 36லட்சம் ரூபா பெறுமதியான போதைவஸ்துவுடன் பெண் கைது!

### வவுனியாவிலிருந்து கொண்டுவரப்பட்டதாம்

நான்கு குழந்தைகளின் தாய் ஒருவர் மூன்று கிலோகிராம் ஹெரோயின் போதைவஸ்துவை வைத்திருந்த போது கொழும்பில் கடந்த ஞாயிறு கைது செய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட போதைவஸ்துவின் சந்தை விலை 36 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டது

புறக்கோட்டையில் உள்ள விடுதி ஒன்றில் இப்பெண் தங்கியிருந்தார். தலையணை உறைக்குள் போதைவஸ்து மறைத்து வைக்கப்பட்டிருந்தது

வவுனியாவில் வைத்துதன் மூலம் ஹெரோயின் அனுப்பி வைக்கப்பட்டதாக அப்பெண் பொலீஸாருக்கு தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய போதைவஸ்துக் கடத்தல் இது என்று சொல்லப்படுகிறது.

விசாரணைக்காக இப்பெண் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-எ)

# 10வயதுக்கு உட்பட்டோருக்கு மூளைக்காய்ச்சல் தடுப்பு மருந்து

கொழும்பு மே 25
மூளைக்காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து ஏற்றும் நடவடிக்கை இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகும்.

வடமேல், வடமத்திய மாகாணங்களில் உள்ள 10 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றுவதுடன் இத்திட்டம் ஆரம்பமாகும்.

புத்தளம், குருநாகல் பொலநறுவை, அனுராதரம் ஆகிய இடங்களில் உள்ள அரசாங்க சுகாதார நிலையங்களில் இத்தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பிரதேசகளிலேயே ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய் அதிகம் பரவியுள்ளது.

தேவைப்படும் இடங்ளுக்கு தடுப்பு மருந்தை அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சைச் சேர்ந்த டாக்டர் மெட்டிஸ் தெரிவித்தார். (இ-7)

## முன்னாள் மேயர் காலமானார்

யாழ்ப்பாணம், மே 25
மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் மேயர் திரு. இராஜரட்ணம் அம்பலவாணர் காலமானார்.

இறுதிச் சடங்குகள் நாளை சனிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெறும். (இ

## ஜனாதிபதியிடம் சரணடைவுக் குழு அறிக்கை

சுதந்திர சரணடைவுக் குழு ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவிருக்கிறது.

தடுப்புக் காவலில் உள்ள தீவிரவாத சந்தேக நபர்கள் சம்பந்தமான விசாரணைகளைத் துரிதமாக முடிப்பது, அவர்களை விடுதலைசெய்வது அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது ஆகியன பற்றிய சிபார்சுகளைக் கொண்டதாக இந்த அறிக்கை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-எ)

## 2 இராணுவ வீரர் கைது

ஒரு பெண்ணை மானபங்கம் செய்ய முயன்ற குற்றச்சாட்டில் இரண்டு இலங்கை இராணுவ வீரர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இரண்டு சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்கும்படி டம்புள்ள நீதிவான் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட சமயம் இவர்களிடம் இருந்த பிஸ்டல், ரவைகள் கைப்பற்றப்பட்டன. (இ-எ)

## இல்லப் போட்டி

யாழ்ப்பாணம், மே 25
வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறும்,

பாடசாலை அதிபர் திரு. க. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் போட்டியில் யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

கொக்குவில் கொத்தணி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், இளைப்பாறிய உதவி அரசாங்கஅதிபர் திரு. கு. கிட்ணர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளுவார்கள்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி யசோதரா தியாகராசா பரிசில்களை வழங்குவார். (இ 7)

## றொனி மீதான வழக்கில் பாஸ்கரலிங்கமும் சாட்சி

கொழும்பு, மே 25
முன்னாள் நிதி அமைச்சர் றொனி டிமெல் மீதான நம்பிக்கை மோசடி வழக்கில் அரச தரப்புச் சாட்சியாக நிதி அமைச்சுச் செயலாளராகவும் திறைசேரிச் செயலாளராகவும் பணியாற்றும் திரு. ஆர். பாஸ்கரலிங்கத்தைச் சேர்ப்பதற்கு நீதிபதி அனுமதி வழங்கினார்.

அரச தரப்புச் சட்டத்தரணி, இதற்கான விண்ணப்பத்தை கடந்த புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில், இவ்வழக்கின் மீதான விசாரணையின்போது சமர்ப்பித்தார்.

இந்த வழக்கில் 23 லட்சத்து 76 ஆயிரத்து 654 ரூபா வெளிநாட்டுச் செலாவணியை மோசடி செய்ததாக றொனி டிமெல் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை செப்டெம்பர் 12க்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ-எ)

## இனி அமைச்சர்களுக்கும் நல்லொழுக்கக் கோவை

கொழும்பு, மே 25
அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் ஆகியோருக்கு என்று தனியான நல்லொழுக்கக் கோவை ஒன்று தயாரிக்கப்படும்.

அமைச்சரவை இப்படி முடிவு செய்திருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்.

உயர் அரச அதிகாரிகளுக்கு என்று தனியான நல்லொழுக்கக் கோவை ஒன்றைத் தயாரிக்க அரசு உத்தேசித்திருப்பதாகவும் அமைச்சர் விஜேரத்னா நேற்றுக் காலை நடந்த செய்தியாளர் மாநாட்டில் சொன்னார். (உ-எ)

## 781/2 கோடி டாலர்

இலங்கைக்கு 78 கோடி 40 லட்சம் அமெரிக்க டாலர் நிதி உதவி அளிக்க இலங்கைக்கு உதவும் நடுகள் குழு வாக்குறுதி அளித்திருக்கிறது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று செய்தியாளர் மத்தியில் இத்தகவலை வெளியிட்டார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

## மரண அறிவித்தல்கள்

### செல்லம்மா கோவிந்தபிள்ளை

திருமதி செல்லம்மா கோவிந்தபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை, யா/டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி) சிவபதம் அடைந்தார்.

இவர் திரு. கோவிந்தபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், மகன் கிருபாகரன் (பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பளை), மருமகள் காஞ்சனாநிதி கிருபாகரன் (கிளி/ சென். திரேசா ம. வி, கிளிநொச்சி), பேத்தி லௌசி இவர்களின் அன்புக்குரிய தெய்வமன்னாள் மண்ணுலகைவிட்டு விண்ணுலகு அடைந்துவிட்டார்.

தகனக்கிரியைக்காக இன்று மாலை 4 00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, சுண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. கோவிந்தபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்)
டச்சு வீதி,
சாவகச்சேரி [13152]

### சின்னத்தம்பி முருகேசு

காரைநகர் களபூமியைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் கொட்டடிச் சந்தியிலிருக்கும் 21 ஆம் இலக்க கடை உரிமையாளரும் ஆகிய சின்னத்தம்பி முருகேசு (பேப்பர் முருகேசு) காலமாகிவிட்டார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 25-05-1990 காலை 9-00 மணிக்கு நடைபெற்று, திக்லை மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மு. கோபாலகிருஷ்ணன்
களபூமி,
காரைநகர். [13153]

## மரண அறிவித்தல்கள்

### க. சிற்றம்பலம்

(நாட்டுக் கூத்துக் கலைஞர்)

உடுத்துறை வடக்கைப் பிறப்பிடமாகவும், வத்திராயன் தெற்கை வசிப்பிடமாகவும் உடைய அமரர் க. சிற்றம்பலம் அவர்கள் 23 - 05 - 90 புதன்கிழமை அகாலமரணம் அடைந்துள்ளார்.

இவர் திருமதி சின்னட்பிள்ளையின் அன்புக் கணவரும், சி. பாலச்சந்திரன் (ஜேர்மன்), சி. மாசிலாமணி (ஜேர்மன்), சி. நாகலிங்கம் (நோர்வே), சி பரமசிவம், திருமதி. ப. புஸ்பமலர், சி கணேசலிங்கம் (B.A Hons ஆசிரியர் மகாஜனாக்கல்லூரி), சி. அன்னலிங்கம் (டானி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. வி. பத்திநாதர், திருமதி பா. சூரியா (ஜேர்மன்) திருமதி மா. றஞ்சிதமலர் (ஜேர்மன்), திருமதி நா. சவுந்தராதேவி, திருமதி ப. மலர், திருமதி க. மனோரதி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும், சுயாத்தா (ஜேர்மன்), சகித்தா (ஜேர்மன்), தயாபரன், அரவிந்தன், அனுரதன், கல்யாணி, மைதிலி (ஜேர்மன்) தனுஷா (ஜேர்மன்), கவிதா, அபிமன்யூ, நித்திலா, நிரோசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (26- 05- 90) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியை உடுத்துறை இந்து மயானத்தில் நடைபெறும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கணேசலிங்கம் [கணேஸ்]
[தமிழ் ஆசிரியர்]
வத்திராயன் தெற்கு,
தாழையடி. 13278

### திருமதி அந்தோனிப்பிள்ளை மேரிதிரேசா

திருமதி அந்தோனிப்பிள்ளை மேரிதிரேசா 23-05-1990 இல் காலமானார்.

இவர் அந்தோனிப்பிள்ளை பாலசிங்கத்தின் (Retired Forest Officer) அன்பு மனைவியும் லீயோகாரியர் (கனடா), ஹென்றி நீற்றா அஞ்சலோ ஆகியோரின் தாயாரும், அஞ்சலோ (வசந்தா ஸ்ரோர்ஸ் ஊர்காவற்றுறை), கிறிஸ்ரின் சோதி (கனடா) ஆகியோரின் மாமியாரும், விறிசிற் அந்தோனிப்பிள்ளை காலஞ்சென்ற அந்தோனியாப்பிள்ளை றிட்ஜ்வே ஆகியோரின் சகோதரியும், நளாயினி, நிர்மலி ஷெல்மா, கிறிஸ்ரி, பேட்டி, கேமா, ஜெம்மா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 25-05-90 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கரம்பொன் புனித செபஸ்தியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அஞ்சலோ
ஒழுவில் வீதி,
சரம்பொன்,
ஊர்காவற்றுறை. [3641]

### இராஜரட்ணம் அம்பலவாணர்

முன்னாள் மட்டக்களப்பு மேயர் இராஜரட்ணம் அம்பலவாணர் காலமாகிவிட்டார்.

அன்னார் ஆனந்தலட்சுமியின் அன்புக் கணவரும், லவக்குமார் (கனடா), உதயக்குமார் (இலங்கை சட்டக்கல்லூரி), ஜோகக்குமார், சிவக்குமார், விஜயகுமார், அரவிந்தகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, பத்மநாதன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற S. R. தளையசிங்கம் - இரத்தினம்மா அவர்களின் அன்பு மருமகனும், அருணகிரிநாதன் (சிரேஷ்ட தொழில் உதவி ஆணையாளர்), காலஞ்சென்ற யோகநாதன் (வழக்கறிஞர்), சண்முகநாதன், இராமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 21, ஈஸ்வரன் ஒழுங்கை மட்டக்களப்பு இல்லத்திலிருந்து எதிர்வரும் சனிக்கிழமை 26 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு இறுதிக்கிரியைகளுக்காக ஆலையடிச்சோலை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. சண்முகநாதன்
71, நாயன்மார் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [13279]

### வித்துவான் ச. சி. ஞானப்பிரகாசம்

வளன்புரம், கொழும்புத்துறையைச் சேர்ந்த வித்துவான் ச. சி. ஞானப்பிரகாசம் அவர்கள் 23-05-1990 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், ஆனந்தராஜா (இந்தியா), அருமைதாஸ் [ஜெயக்குமார்] (பிரான்ஸ்), லூமினா [றஜனி] (ஆசிரியை, சென். பற்றிக்ஸ் கல்லூரி), சாந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜ், ராகினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அனு, ராஜீ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக ஞாயிற்றுக்கிழமை (27-05-1990) மாலை 4-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கொழும்புத்துறை சென். சேவியர் குருமடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக யாழ். பேராலய சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:- திருமதி சரஸ்வதி ஞானப்பிரகாசம்
செல்வி லூமினா ஞானப்பிரகாசம்
[13151]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org